# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம

வருடாந்த அறிக்கை

2012

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்
த. பெ. இல-1382
130, டபிள்யு. ஏ. டி. ராமநாயக்கா மாவத்தை
கொழும்பு -02.

20.06.2014

செயளாளர்,
அரசவளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு,
561÷3, எல்பிற்றிகல மாவத்தை,
கொழும்பு- 05,

ஐயா,

**<u>இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்</u>**
**<u>2012Mம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும கணக்குகளும்</u>**

அரச கைத்தொழில் கூட்டுத்தாபன 1957 ம் ஆண்டின் 49 இலக்க சட்டத்தின் 30 (1) பிரகாரம் 2012 Mம் ஆண்டின் அறிக்கையை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் சார்பில் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

(அ) 2012 Mம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கை

(ஆ) கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

மற்றும்

(அ) சபையின் அவதானிப்பு (ஆ) மேலும்

jங்கள் உண்மையுள்ள,

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் சார்பில்**

**ஒப்பம்,**

**என்.எஸ்.எம்.சம்சுதீன்,**

**தலைவர்.**

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1) | இயக்குனர் குழு அறிக்கை | 01 – 03 |
| 2) | கூட்டிணைப்புத் தகவல் | 04 – 05 |
| 3) | மனித மூலவளங்கள் | 06 |
| 4) | கணக்கீட்டுக் கொள்கைகள் | 07 – 08 |
| 5) | நிதி நிலை அறிக்கை – 2012 | 09 |
| 6) | விரிவான வருமான அறிக்கை | 10 |
| 7) | பங்கு பரிவர்த்தனை அறிக்கை | 11 |
| 8) | நிதிப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை | 12 |
| 9) | நிதி அறிக்கை தொடர்பான குறிப்புகள் | 13 – 15 |
| 10) | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 14 (2) (சீ) | 16 – 23 |
| 11) | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் அதன் மீதான பணிப்பாளர்களின் அபிப்பிராயமும் | 24 – 31 |

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
## 2012ஆம் ஆண்டிற்கான இயக்குனர் குழு அறிக்கை

### 1.0 வரலாறு

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் இலங்கையில் சீமெந்து துறையில் முன்னோடி நிறுவனமாகும்.

1950ஆம் ஆண்டு கைத்தொழில்திணைக்களத்தின் கீழ் காங்கேசன்துறையில் நிறுவப்பட்ட சீமெந்து தொழிற்சாலையானது 1956ஆம் ஆண்டு1955ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரச அனுசரனை பெற்ற கூட்டுத்தாபன ஏற்பாட்டுச் சட்டத்தின் கீழ் பொதுக் கூட்டுத்தாபனமாக உருமாற்றப்பட்டதுடன் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை என்றும் பெயரிடப்பட்டது.

மீண்டும் அது 1959ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதிஇலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமாக 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்ட மூலத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாக அதன் பெயர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனமாகமாற்றப்பட்டது.கைத்தொழில் மற்றும் விஞ்ஞான விவகார அமைச்சின் கீழ் செயற்பட்ட இக்கூட்டுத்தாபனமானது 1985ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதியிலிருந்து உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் கட்டிடத்துறை அமைச்சின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.அதன் பின்பு,1997ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் திகதி மீண்டும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு 2010ஆம் ஆண்டுவரை செயற்பட்டதுடன் அதனைத் தொடர்ந்துஅரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிலையாகக்க கையளிக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு கூட்டுத்தாபனம் லங்கா சீமெந்து தனியார் நிறுவனத்தில் 1,083,618,910 ரூபாவை முதலீடு செய்ததுடன் அதன் மூலதனப் பங்குடமை வீதமானது 62.45மூ ஆகும். பங்கொன்றின் விலை ரூபா 10 ஆகும். இம் முதலீடானது செலுத்தப்பவில்லை என்பதுடன் அதன் துவக்கத்திலிருந்து இதுவரை மீள்செலுத்தப்படவில்லை. எனினும்,2009 மற்றும் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கில் நிலவிய நெருக்கடி நிலை முடிவடைந்ததன் பின் அதன் பங்குகளின் விலை தீவிரமாக உயர்வடைந்தது. பங்கொன்றின் ஆகக் கூடிய சந்தை பெறுமதிரூபா 34.75ஆக உயர்வடைந்ததுடன் 2011ஆம் ஆண்டு அதன் சந்தை விலை ரூபா 26.20 ஆக வீழ்ச்சி கண்டது.

இலங்கை சீமென்துக் கூட்டுத்தாபமானது லபார்ஜ் மகாவலி சிமெந்து நிறுவனத்தின் ரூபா 10.∴- பெறுமதியான 320,000 சாதாரன பங்குகளை தனது உடமையாகக் கொண்டுள்ளது, மற்றும் 1995 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தில் இரண்டு புதிய சாதாரண பங்கிற்கு பங்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக பெற்று கூட்டுத்தாபனம் நன்மை அடைந்தது. தற்போது கூட்டுத்தாபனம் லபார்ஜ் மகாவலி சீமெந்து நிறுவனத்தின் 480,000 சாதாரன பங்குகளை உடமையாகக் கொண்டுள்ளது, அது அந்நிறுவனத்தின் மூலதனத்தில் 10 வீதமாகும். 1999ஆம் ஆண்டுவரை கூட்டுத்தாபனமானது இம்முதலீட்டின் வாயிலாக கூடுதல் இலாபத்தினை அடைந்து வந்துள்ளது. அதன் பின்பு 2004ஆம் ஆண்டைத்தவிர லபாரஜ் நிறுவனத்திடமிருந்து கூட்டுத்தாபனமானது எவ்வித இலாபத்தினையும் அடையவில்லை.

புத்தளம் சீமெந்து ஆலை மற்றும் றுஹுனு சீமெந்து ஆலை ஆகியன மக்கள் மயப்படுத்தப்பட்டதுடன், மட்டக்குளிய கடதாசி ஆலையின் உரிமத்தை பொதுத் திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்பு இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திடம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மாத்திரம் தனித்து விடப்பட்டது. அத்துடன் 1990 ஜூன் மாதத்திலிருந்து வடக்கில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையால் அதன் செயற்பாடுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் திறைசேரி அதன் ஊழியர்களுக்கு 2001ஆம் ஆண்டு மார்ச்வரை வேதனம் வழங்கி வந்துள்ளது. நிதிக்கட்டமைப்பை வலுவாக்கும் பெறும் சுமை கூட்டுத்தாபனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

2003 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் சுயமாக ஓய்வு பெறும் திட்டத்தினை அறிமுகம் செய்தது. அப்போது 173 மற்றும் 21 ஊழியர்கள் முறைப்படியாக மேற்குறிப்பிட்ட வருடங்களில் அத்திட்டதின் கீழ் ஓய்வு பெற்று நிறுவனத்தை விட்டு வெளியேறினர். திறைசேரியினால் ரூபா 49.18 மில்லியன் மற்றும் ரூபா 8.51 மில்லியன்களை முறையாக மேற்கூறிய வருடங்களில் ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க ஒதுக்கீடு செய்தது.

## 2.0 தற்போதைய நிலை

### அ) சீமெந்து விற்பனை

விற்பனைக்கான சீமெந்து இறக்குமதி செய்யும் செயற்பாட்டின் வாயிலாக 2008ஆம் ஆண்டின் கடைசிப்பகுதியில் சீமெந்து கூட்டுத்தாபனமானது சீமெந்து வர்த்தக்தில் நுழைந்தது.

கூட்டுத்தாபனமானது 2008ஆம் ஆண்டு 12,390 மெ.டொ. மற்றும் 2009ஆம் ஆண்ட 84,308 மெ.டொ. சீமெந்தினை பாகிஸ்தான் ஜீ.டீ. கான் சீமெந்து நிறுவனத்திடமிறுந்து இற்குமதி செய்ததுடன் அதே வருடங்களில் காங்கேசன் எனும் பெயரில் அதனை விநியோகம் செய்தது. 2010ஆம் ஆண்டு நிறுவனம் 36,260 மெ.டொ. சாதாரன போட்லன்ட் சீமெந்தினையும், 2011 மற்றும் 2012ஆம் வருடங்களில் முறைப்படி 58,352 மெ.டொ. மற்றும் 28,249 மெ.டொ. சீமெந்தினை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்தது.

இலங்கை சீமெந்து கூட்டுத் தாபனத்தின் சீமெந்து சந்தைக்கான வருகையானது மிகவும் குறிப்பிடத்தாகும். அது தனியார் சீமெந்து விற்பனையாளர்களின் ஆதிக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் அவர்களின் விற்பனையினை விலையினை குறைப்பற்கும் வலியுறுத்தியது.

எவ்வாறாயினும், போட்டியாளர்களிடமிருந்து ஏற்பட்ட தடைகள் காரணமாக இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திறகு நிதி மூலமான எவ்வித பயனையும் அடைய முடியவில்லை.

### ஆ) கொன்கிறீட் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

1997 ஒக்டோபர் மாதம் உரும்பிராயில் கொன்கிறீட் பொருட்களின் உற்பத்தி தொழிற்சாலை ஒன்று கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரதான உற்பத்தியானது இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆகிய நிறுவனங்களுக்கு கொங்கிறீட் தூண்களை உற்பத்தி செய்து வழங்குவதாகும். எவ்வாறாயினும், 2006ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து 2008ஆம் ஆண்டு முதற் பகுதி வரை அப்போது நிலவிய அசாதாரன சூழல் காரணமாக மூலப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட்டு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

2009ஆம் ஆண்டு முழுவதும் 3,312 தூண்கள் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆகிய நிறுவனங்களின் களஞ்சிய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலதிகமாக கொன்கிறீட் கல், பீம், நடைபாதைப்படி மற்றும் வேலித் தூண் ஆகியன உற்பத்தி செய்து கட்டிடத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ் பல்கலைக்கழகம் மற்றம் பொது மக்களுக்கும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தியானது 2,117 கொன்கிறீட் தூண்களும், 4,505 பென்தல் தூண்களும் ஆகும், மற்றும் 2011ஆம் ஆண்டில் 1918 கொன்கிறீட் தூண்களும், 1892 பென்தல் தூண்களும் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 2012ஆம் ஆண்டு 2,687 கொன்கிறீட் தூண் உற்பத்தி செய்யப்பட்டது. இவ் உற்பத்தி நடவடிக்கையானது 64 ஊழியர்களுக்கு முழுநேர வேலை வாய்ப்பை வழங்க ஏதுவாக அமைந்ததுடன் மேலும் தொழில் வாய்ப்பை அதிகரிக்க உதவியுள்ளது.

## 3.0. இலாபம்

2011ஆம் ஆண்டு கூட்டுத்தாபனமானது ரூபா 2,600 மில்லியனை விற்பனை வருமானமாகப் பெற்றுள்ளது. எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் இந்நடவடிக்கையானது தவிர்க்க முடியாத காரணங்களால் அனுபவத்தை ஏற்படுத்திய இழப்பாக அமைந்தது. மேலும், கூட்டுத்தாபனம் ரூபா 35,623 மில்லியன்களை குத்தகை வாடகை, முதலீட்டுகான வட்டி மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலம் வருமானமாக அடைந்தது. எவ்வாறாயினும், நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கூட்டுத் தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்ட 77755-12 ம் இலக்கம் கொண்ட வழக்கின் தோல்வி காரணமாக 13,000 உறை சீமெந்தினை அழிக்க நேர்ந்தது. அதன் நஷ்டம் ரூபா 9.1 மில்லியனாக கணக்கிடப்பட்டு அதனை இலாப நட்ட கணக்கில் பதியப்பட்டுள்ள. கூட்டுத்தாபனம் கடந்த மூன்று மாதங்களாக சீமெந்து இறக்குமதியை நிறுத்தியுள்ளதுடன், இக்காலகட்டத்தில் வங்கி வட்டி வீதம் மற்றும் ஏனைய சுமைகள் அதிகரித்துள்ளது. மேலும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் அமெரிக்க டொலர் 300,000 இடால்

டிரேட் இன்டர்நஷனல் நிறுவனத்திற்கு (அமரிக்க நிறுவனம்) செலுத்த வேண்டியேற்பட்டது. எனவே,ரூபா 40 மில்லியன் இலங்கை வங்கியிடமிருந்து கடனகாப்பெற்று வாதிக்கு செலுத்தப்பட்டது. இதுவரை அத்தொகை இலாப நட்டக்கணக்கில் காட்டப்படவில்லை.

## 4.0. இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நடவடிக்கை

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஒரேயொரு சீமெந்து ஆலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் அதன் உற்பத்திப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உடனடியாக காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் உற்பத்தியை மேற்கொள்வது கடினமாகவுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் பிரதான பொறுப்பாகக் கருதப்படுவது என்னவென்றால் காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் உற்பத்தியை மீள ஆரம்பிப்பதாகும். இது தொடர்பாக பல சாகத்தன்மைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தேவையான அறிக்கைகளை உரிய அதிகாரிகளுக்கு பாதுகாப்பு நிலைமைய உறுதிப்படுத்துவதற்கு மற்றும் நிதி ஒதுக்கீடுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டிற்கு குறைந்த விலையில் தரமான சீமெந்துகளை பெற்றுக் கொடுப்பதற்காக புதிய பொதியிடும் ஆலைகளை ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களில் பொருத்தமான இடத்தில் அமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அதன் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்தோடு புத்தளம் பாலாவி சீமெந்து ஆலைக்கு அருகாமையில் அமைந்துள்ள முந்திரித் தொட்டக் காடுகள் உள்ள பகுதியை பயன்படுத்துவதற்கான திட்டமொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

30 வருடங்களுக்குப் பின் பொலிஸ் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்கம் 287, காலி வீதி, கொழும்பு-03 ல் அமைந்துள்ள நிலப்பரப்பில் வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற்று பலமாடிக் கட்டடிமொன்றை நிர்மாணிக்கும் செயல் திட்ட யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் 25 மாடிகளைக் கொண்ட தேசிய கலை நயத்துடன் கூடிய 4 நிலையான வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட கட்டிடமொன்றிற்கான யோசனை முன்மைவக்பபட்டுள்ளது. செயற்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 4,500 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இது ஹோட்டல் திட்டமாக மாற்றப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே எம்ஓயூ அதிகாரிகள் மற்றும் சீன தேசிய இலக்றிக் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தமும் 2012 ஓகஸ்ட் மாதம் கைச்சாத்தாகியுள்ளது. மேற் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் மொத்த செலவு அமெரிக்க டொலர் 60,000,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 5.0. பாராட்டுக்கள்

பணிப்பாளர் குழு 2012ஆம் ஆண்டில் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனதிற்கு ஒத்துழைப்புகளை வழங்கிய கௌரவ கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தேசிய வளங்கள் அமைச்சருக்கும், அதன் அதிகாரிகளுக்கும், பொதுத் திறைசேரிக்கும், இலங்கை தரக்கட்டுபாட்டு நிறுவனத்திற்கும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கும், தேசிய வளங்களுக்கும், மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய சீமெந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும் அதன் பணிப்பாளர்கள் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு தமது சேவைகளை வழங்கிய ஊழியர்களுக்கும் தமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

# நிறுவனத்தின் 2012ஆம ஆண்டுக்கான செயலாற்றுகை பற்றிய தலைவரின் அறிக்கை

அரச வளங்கள், மற்றும் தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கான அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், இப்பொழுது சீமெந்தை இறக்குமதி செய்து நியாய விலையில் விநியோகிப்பதைப் பிரதான கருமமாகச் செய்வதுடன், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற் சாலையில் தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களை ஈடுபடுத்தி, சீமெந்து சார்ந்த உற்பத்திகளை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டுள்ளது.

சீமெந்து இறக்குமதி செய்து விநியோகிப்பதன் மூலம் 2012ஆம் ஆண்டினுள் சாதாரண போட்லன்ட் சீமெந்து 28,249 மெற்றிக் தொன்களை இறக்குமதி செய்து விநியோகிக்கப் பட்டது. கொங்கிறீற் உற்பத்தி 2,687 தூண்கள் ஆகும்.

2012ஆம் ஆண்டின் முழுமையான சம்பாத்தியம் ரூபா 361,933,000 ஆவதுடன் பொறுக்க வேண்டி ஏற்பட்ட மொத்த நட்டம் 10,603,000 ஆகும். அதே போல்தேறியநட்டம் ரூபா 70,383,000 ஆகும். இது கடந்த வருடம் சார்பில் வீழ்ச்சியைக் காண்பித்தாலும் அதன்மீது தாக்கம் செய்த உவப்பற்ற நிலைமைகளாக பின்வருவனவற்றை காண்பிக்க முடியும்.

1. சீமெந்து இறக்குமதியின்போது இலங்கை வங்கியிடமிருந்து கடன் அடிப்படையில் வரவுக்கடிதம் பெற்றுக் கொண்டு சீமெந்து கொண்டு வரும்பொழுது கொடுக்க நேரிடும் பணத்திற்கு உரிய வட்டியை நேர்முகச் செலவாகக் கருதி விற்பனைச் செலவுடன் ஒன்றிணைப்பதன் மூலம் மொத்த நட்டம் காட்டப்படுகிறது.

2. அதேபோன்று சீமெந்து இறக்குமதி செய்யும் போது விநியோகஞ் செய்யும் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய விலை மேலிடப்படுவதும் அதனைச் சார்ந்து விற்பனை விலையை உயர்த்துவதற்கு போட்டிச் சந்தையில் சந்தர்ப்பம் இல்லாது போவதும் இதன் மீது நேரடித்தாக்கம் செலுத்தியது.

3. 2012ம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய வசதிகள் காரணமாக உரிய களஞ்சிய முகாமையைச் செயற்படுத்த இயலாமை காரணமாக சீமெந்து கட்டியாவதும் அதன்மீது பாவனையாளர் அதிகார சபை ஈடுபட்டு வழக்கு தாக்கல் செய்ததின் காரணமாக ஏற்பட்ட ரூபா. 9 மில்லியன் நட்டமும் இதன் மீது தாக்கம் புரிந்துள்ளது.

4. அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய சர்வதேச கம்பனியான இற்றால் வர்த்தக நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டி ஏற்பட்ட ரூபா 39 மில்லியன் செலவு நிர்வாகச் செலவினுள் அடக்கப்பட்டதும் இதன் மீது தாக்கம் புரிந்துள்ளது.

5. யுத்தமயமான யுகத்தின் முடிவுடன் காங்கேசன்துறையில் உற்பத்தி செய்யப்பட்ட சீமெந்தினை ஒத்த உற்பத்திக்காக போட்டி நிறுவனங்கள் தோன்றியதுடன், எமது உற்பத்திக்கான கேள்வி வீழ்ச்சி அடைந்ததும் அங்கு சேவையிலுள்ள 31 பேர்களுக்குமுரிய சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செய்யவேண்டியேற்பட்டது போன்ற காரணிகளால் இத்தேறிய நட்டம் ஏற்பட ஏதுவானது.

6. நிறுவனத்தில் நடைமுறையிலுள்ள ஏனைய வங்கிக் கடன் மற்றும் மேலதிகப் பற்றுக்கான வட்டிச் செலவும் இதன்மீது தாக்கம் புரிந்துள்ளது.

இந்நிலையில் 2012ஆம ஆண்டு நடுப்பகுதியில் நியமனம் பெற்ற நான் உள்ளடங்கலான பணிப்பாளர் சபையினதும், கூட்டுத்தாபனப் பணியாளர்களதும் முழுமையான ஒத்துழைப்பும் அனைவரதும் முழுமையான அர்ப்பணிப்பும், நல்ல முகாமையும் காரணமாக மேலும் ஸ்திரமானதும் இலாபகரமானதுமான நிறுவனமாக அபிவிருத்தியை நோக்கிச் செயற்பட்ட வண்ணம் உள்ளது.

ஒப்பம்,
**தலைவர்,**
**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.**

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## 2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டிணைக்கப்பட்டதும் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பாத்தியத்திற்குமான வருமான அறிக்கை

| | 2012 (ரூபா.'000) | 2011 (ரூபா.'000) | 2010 (ரூபா.'000) | 2009 (ரூபா.'000) | 2008 (ரூபா.'000) |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 361,933 | 656,071 | 410,709 | 1,070,591 | 126,848 |
| விற்பனை செலவீனம் | (372,536) | (656,676) | (406,508) | (1,136,970) | (125,029) |
| **மொத்த இலாபம்** | **(10,603)** | **(605)** | **4,201** | **(66,379)** | **1,819** |
| ஏனைய வருமானம் | 33,330 | 35,623 | 34,846 | 28,889 | 43,619 |
| விநியோக செலவு | (5,776) | - | - | - | - |
| நிர்வாக செலவீனம் | (72,540) | (20,873) | (33,973) | (41,883) | (36,940) |
| நிதிப் பெறுமதி | (14,749) | (11,545) | - | - | - |
| வரிக்கு முன்னரானஇலாபம்∴(நட்டம்) | **(70,338)** | **2,600** | **5,074** | **(79,373)** | **8,498** |
| வருமான வரிச் செலவீனம் | - | - | - | - | - |
| **வருடத்திற்கான நட்டம்** | **(70,338)** | **2,600** | **5,074** | **(79,373)** | **8,498** |

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள்
கழிக்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## 2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஐந்து ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கை

| | 2012 (ரூபா.'000) | 2011 (ரூபா.'000) | 2010 (ரூபா.'000) | 2009 (ரூபா.'000) | 2008 (ரூபா.'000) |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறை சொத்து அல்லாதவை** | | | | | |
| சொத்து,இயந்திரம், மற்றும் உபகரணங்கள் | 547>396 | 550>705 | 543,939 | 544,440 | 544,351 |
| நீண்ட கால வருமதிகள் | 757>224 | 757>224 | 757,224 | 757,224 | 757,224 |
| துணை மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு | 1>090>019 | 1>090>019 | 1,090,019 | 1,090,019 | 1,090,019 |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | 28>860 | 25>526 | 68,123 | 44,593 | 40,361 |
| **மொத்தம்** | **2,423,499** | **2,423,474** | **2,459,305** | **2,436,276** | **2,431,955** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| இருப்புகள் | 22>843 | 20>532 | 28,689 | 10,098 | 67,163 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 81>796 | 76>972 | 119,074 | 134,399 | 73,540 |
| முற் கொடுப்பனவுகள் | 244 | 1>248 | 589 | 443 | 1,210 |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானாவை | 3>084 | 14>071 | 9,762 | 3,220 | 1,047 |
| **மொத்தம்** | **107,967** | **112,823** | **158,114** | **148,160** | **142,960** |
| **மொத்த சொத்துக்கள்** | **2,531,466** | **2,536,297** | **2,617,419** | **2,584,436** | **2,574,915** |
| **பரிப்புகள் மற்றும் பொறுப்புகள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஓதுக்கல்கள்** | | | | | |
| வழங்கிய மூலதனம் | 966,972 | 966,972 | 966,972 | 966,972 | 966,972 |
| பொது ஓதுக்கல்கள் | 9,997 | 9,997 | 9,997 | 9,997 | 9,997 |
| மீள்மதிப்பீட்டின் ஓதுக்கல்கள் | 536,119 | 536,119 | 536,119 | 536,119 | 536,119 |
| திரட்டிய இலாபம்.ஃ.(நட்டம்) | 301,537 | 372,864 | 372,219 | 367,144 | 446,518 |
| | **1,814,625** | **1,885,952** | **1,885,307** | **1,880,232** | **1,959,606** |
| **நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை** | | | | | |
| நீண்டகால பொறுப்புகள் | 546,177 | 492,426 | 492,426 | 492,426 | 492,426 |
| தவற விடப்பட்ட ஓய்வுகாலசலுகைகள் | 17,796 | 18,919 | 18,783 | 20,807 | 22,418 |
| | **563,973** | **511,345** | **511,209** | **513,233** | **514,844** |
| **நடைமுறைப்பொறுப்புகள்** | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்துமதிகள் | 124,791 | 62,857 | 61,730 | 38,849 | 42,538 |
| நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட வட்டிகள் | 1,161 | 53,665 | 147,775 | 152,122 | 57,927 |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை | 26,916 | 22,478 | 11,398 | - | - |
| | **152,868** | **139,000** | **220,903** | **190,971** | **100,465** |
| **மொத்த பரிப்புகள் மற்றும் பொறுப்புகள்** | **2,531,466** | **2,536,297** | **2,617,419** | **2,584,436** | **2,574,915** |

# கணக்காய்வுக் குழு அறிக்கை 2012

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்களைக் கொண்டது.அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கான அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களப் பிரதிநிதி ஒருவரும் அவதானிப்பாளர்களாக இருந்தனர்.மீள்பார்வைக் காலப்பகுதியில் குழுவின் தலைவராக திரு.எஸ்.எம்.பியதிஸ்ஸ இருந்தார்.திருமதி.று.து..ஹந்தபான்கொடவும் திரு.பியசேனவும் ஏனைய இரு நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்களும் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக 2012-யூன் 30ந் திகதிவரை இருந்ததுடன் 2012யூலை 20ந் திகதி அன்று கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் மாற்றத்துடன் திரு.எல்.அபயநாயக்க மற்றும் திரு.ஏ.ஜயசிங்க ஆகியோரால் பதிலீடு செய்யப்பட்டனர்.கணக்காய்வுக்குழுவின் பிரதான வகிபங்கும் பொறுப்புக்களும உள்ளடங்குவன.

அ) பொருத்தமான இலங்கைக் கணக்கீட்டுத்தரங்கள் மற்றும் ஏனைய பிரயோகப்படவல்ல சட்டரீதியான தேவைகளுக்கிணங்க நிதிசார் அறிக்கையிடல் செய்யப்படுவதனை உறுதி செய்யும் மேற்பார்வையிடலுக்கு சபைக்கு உதவி செய்தல்.

ஆ) சகல பொருத்தமான விதிகளும் ஒழுங்கு விதிகளும் அரசாங்கத்தினால் விநியோகிக்கப் படும் சுற்றுநிருபங்களும் இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாக மீள்பார்வை செய்தல்,மேலாண்மை செய்தல்,இணங்கி ஒழுகப்படாமை பற்றி விதப்புரை செய்தல் ஆகியவற்றை உறுதி செய்ய சபைக்கு உதவுதல்.

இ).உள்ளக.ஃ.வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகளையும் ஊழீநு இனது விதப்புரைகளையும் மீள் பார்வை செய்வதுடன் பரிகார நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவுதல்.

ஈ)போதுமான உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை அறிமுகப்படுத்தி அமுலாக்குவதற்கு சபைக்குத் துணைபுரிதல்.

மீள்பார்வைக்குள்ளாகும் நிதியாண்டின் போது கணக்காய்வுக்குழு பிற கருமங்களுடன் பின்வரும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

- கணக்காய்வுக்கு உட்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்களின் மீள்பார்வை.
- கணக்காய்வுக்குள்ளான ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களின் மீள்பார்வை.
- கணக்காய்வாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகளின் மீள்பார்வையும் முகாமையினால் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கையும்.
- சட்டரீதியான அறிக்கையிடல் மற்றும் கொடுப்பனவுத் தேவைகளுடன் இணங்கி ஒழுகுதல் பற்றிய அறிக்கையின் மீளாய்வு.

ஒப்பம்
**எஸ்.எம்.பியதிஸ்ஸ,**
**தலைவர்,**
**கணக்காய்வுக்குழு.**

## கூட்டிணைப்புத்த தகவல்

**பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம்**

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்**

த.பெ.இல.1382,130,டபிள்யூ.ஏ.டீ.இராமநாயக்க
மாவத்தை, கொழும்பு-02.

**தொலைபேசி :**

011-2440201, 011-2440211, 011-2440212

**பாக்ஸ் :** 011-244886

## தொழிற்சாலை

காங்கேசன் சீமெந்து ஆலை
தொலைபேசி: கேகேஎஸ் 26, 95

## கொங்கிறீட் செயற்திட்டம் - யாழ்ப்பாணம்

காங்கேசன் சீமெந்து ஆலை, காங்கேசன்துறை

**தொலைபேசி:** 021 321 5340 – 41

## வங்கியாளர்கள்

மக்கள் வங்கி
இலங்கை வங்கி
கொமர்ஷல் வங்கி

## துணை நிலைக் கம்பனி

**பதிவு செய்யபட்டலங்கா சிமெந்த்து ீடுஊ**

7 வது மாடி,
இலங்கை பொறியியற் கூட்டுத்தாபன கட்டிடம்,
130, டபிள்யூ.ஏ.டீ.இராமநாயக்க மாவத்தை,
கொழும்பு-02.

**தொலைபேசி :** 011-2447746, 011-2389703

## தொழிற்சாலை

கீரிமலை வீதி,
காங்கேசன்துறை

## சீமெந்துக் களஞ்சியங்கள்

**தொலைபேசி:** 011-3030041,**பாக்ஸ்:** 011-4923959

472,ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு.

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் நாயகம்,
கொழும்பு-07

## இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்

**ஆய்வுக்குட்பட்ட ஆண்டின் போது முகாமைத்துவ சபை பின்வரும் பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. என்.எஸ்.எம். சம்சுதீன் | தவிசாளர் | நியமனம் 26.07.2012 |
| 2. | திரு. ஜே.கே.என்.சீ. பெரேரா | தொழிற்பாட்டுப் பணிப்பாளர் | நியமனம் 26.07.2012 |
| 3. | திரு. அருன ஜயசிங்க | பணிப்பாளர் | நியமனம் 26.07.2012 |
| 4. | திரு. சீ.ஜே. விஜேசேகர | பணிப்பாளர் | நியமனம் 26.07.2012 |
| 5. | திரு. லால் அபேநாயக்க | பணிப்பாளர் | நியமனம் 26.07.2012 |
| 6. | திரு டீ.டீ. அமரதுங்க | பணிப்பாளர் | நியமனம் 26.07.2012 |
| 7. | திரு எஸ்.எம். பியதிஸ்ஸ | பணிப்பாளர் | நியமனம் 05.07.2010 |

## சிரேஷ்ட முகாமைக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். செல்வகுமார் | விநியோக முகாமையாளர் | தலைமையகம் |
| 2. | திருமதி. சீ.ஐ. கருணாதிலக்க | கணக்காளர் | தலைமையகம் |
| 3. | திருமதி. பீ.எஸ்.டீ. பெர்னான்டோ | உள்ளக ஆயாவாளர் | தலைமையகம் |
| 4. | திரு. பீ. விமலதாஸ் | உதவி பொறியியலாளர் (கொன்கிறீட்) | யாழ்ப்பாணம் |

## இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்

மனித மூலவளங்கள் 2012-12-13 அன்றுள்ளவாறு

| வகுதி | சிரேஷ்ட முகாமை | மத்திய முகமை | கனிஷ்ட முகாமை | உதவி முகாமை | ஆரம்ப மட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தலைமை காரியாலயம் | 02 | 01 | 05 | 12 | 08 | 28 |
| என்.இ.எம்.ஓ கு விடுவிப்பு | - | - | 01 | - | - | 01 |
| காங்கேசன் சீமெந்து ஆலை | - | - | 01 | 04 | 30 | 35 |
| மொத்தம் | 02 | 01 | 07 | 16 | 38 | 64 |

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

### கணக்கீட்டுக் கொள்கைள்

**01. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்.**

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகளுக்கு ஏதுவாக அமைந்துள்ளது. எவ்வித கணக்குகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பணவீக்கக் காரணிகளும் காட்டப்பட வில்லை.

**02. வெளிநாட்டு செலாவணியை மாற்றுதல்**

அனைத்து வெளிநாட்டு பரிவர்த்தனைகளும் அத்தருணத்தில் நிலவும் நாணயமாற்று விகிதத்திற்கேற்ப மாற்றப்பட்டன.

**03. சொத்துக்களும், அவற்றைப் மதிப்பீடு செய்யும் அடிப்படையும்**

**3.1. நிலையான சொத்துக்களும், தேய்மானமும்**

நிலையான சொத்துக்களின் பெறுமானமாக கொள்வனவு விலை அல்லது மதிப்பீட்டுத் தொகையிலிருந்து தேய்மானத்தை கழித்துவரும் தொகை காட்டப்பட்டுள்ளது.

**3.2. தேய்மானம்**

கொள்வனவு, மதிப்பீட்டு பெறுமானம் மற்றும் அதன் பயன்தரு கால எல்லை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் காட்டப்பட்டுள்ளது.

3.3. கொள்வனவு செய்த வருடத்திற்கான தேய்மானம் காட்டப்படவில்லை.
3.4. பாவனையில் இல்லாத நிலங்களுக்காக தேய்மானம் எதுவும் காட்டப்படவில்லை.
3.5. தேய்மானம் கழிக்கப்பட்ட விதம் பின்வருமாரு காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடம் | 6.67% |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரம் | 12.50% |
| மண் அசைப்பு மற்றும் கனரக உபகரணம் | 25.00% |
| மோட்டர் வாகனம் | 25.00% |
| உதிரி உபகரணங்களும், நகரக்கூடிய உபகரணங்களும் | 25.00% |
| பொருத்திகள் மற்றும் தளபாடங்கள் | 25.00% |
| தண்டவாளங்கள் மற்றும் வீதிகள் | 10.00% |

**3.6. மூலதனமாக்கல்**

பெறுமதி ரூபா 10,000∴-க்கு குறைவான கருவிகள் மற்றும் தளபாடங்கள் மூலதனமாகக் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக கொள்வனவு செய்த ஆண்டில் இலாப நட்டக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**3.7. முதலீடு**

பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளில் நீண்டகால முதலீடு அதன் பெறுமானத்தின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப அவ்வறிக்கை ஆண்டில் காண்பிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால முதலீடுகள் நிர்ணயிக்கப்பட்ட சந்தைப் பெறுமானத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.8. பங்கு மற்றும் முன்னேற்ற நடவடிக்கை**

பங்கு மற்றும் முன்னேற்ற வடவடிக்கைகள் அதன் கொள்வனவு விலை அல்லது நிகர பெறுமானத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.9. கடனாளிகள்**

வியாபார மற்றும் சில்லறைக் கடனாளிகளின் பற்றுப் பெறுமதியில் அறவிடா முடியா ஐயக்கடனாகக் காட்டப்பட்டுள்ளது.

4. **பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்**

**4.1. பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு**

பணிக்கொடைகளுக்கான கொடுப்பனவு ஏற்பாடு சட்ட இலக்கம் 12, 1983ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பணிக்கொடைகளுக்கான கணக்குகள் செலுத்தப்பட்டுள்ளது.

4.2. எதிர்பாரா பொறுப்புகள்

ஐந்தொகை முடிவடையும் திகதியில் எதிர்பாரா பொறுப்புகளுக்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

**4.3. குறுகியகால பொறுப்புகள்**

வங்கிக் கடன், வங்கி அதிகப்பற்று மிகுதி மற்றும் பன்னிரண்டு மாதங்களுக்குட்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் குறுகியகால பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது.

**4.4. நீண்டகால பொறுப்புகள்**

பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்துவிதமான கொடுப்பனவுகளும் நீண்டகால பொறுப்புகளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

5. **இலாப நட்டங்கள்**

**5.1. புரள்வு**

வாடிக்கையாளர்களுக்கான விற்பனை மற்றும் கூட்டுத்தாபனத்தின் உள்ள விற்பனை ஆகியன புரள்வாக காட்டப்பட்டுள்ளது.

**5.2. விற்பனை விலை**

விற்பனை விலையானது சீஜஎப் பெறுமானம் சேர்க்கப்பட்ட இறக்குமதி செலவு,சுங்க வரி,இலங்கை துறைமுக அதிகாரசபையின் கட்டணம்,கப்பல் போக்கு வரத்துக்கான கட்டணம்,கொள்கலன் கையாளும் கட்டணம்,போக்குவரத்து செலவு,ஏற்றல் இறக்கல் செலவு,தரிப்பிட கட்டணம்,நிதிக் கட்டணம்,களஞ்சியப்படுத்தலில் ஏற்படும் பாதிப்பு மற்றும் ஏனைய நேரடி செலவுகளைக் கருத்திற் கொண்டு நிரணயிக்கப்பட்டுள்ளது.

**5.3. செலவீனம்**

அனைத்துவிதமான மறைமுக முகாமைத்துவ, உற்பத்தி, விற்பனை செலவு மற்றும் வருடத்தில் செலுத்திய அனைத்து கொடுப்பனவுகளும் செலவீனமாக கருதப்படும்.

**5.4. வரிக்குப் பிந்திய இலாபம்**

ஐயக் கடன்கள், அனைத்து பொறுப்புகளைச் செலுத்துதல்,தொகை திருத்தங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் தேய்மானம் ஆகியவற்றைக் கழித்த தொகையில் வரிக்கான தொகை செலுத்தப்பட்டதன் பின்பு கூட்டுத்தாபனத்தின் வரிக்குப் பிந்திய இலாபமாக கணக்கிடப்பட்டுள்ளது.

அனைத்து செலவீனங்களிலும் வியாபார நடவடிக்கை செலவீனம் மற்றும் மூலதன சொத்து பராமரித்தல் ஆகியவற்றின் செலவுகளும் உள்ளடக்கபட்டுள்ளது.

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானநிதி நிலை அறிக்கை**

**(ரூபா. '000)**

| | குறிப்பு | 2012 | 2012 | 2011 | 2011 |
|---|---|---|---|---|---|
| **சொத்து** | | | | | |
| **நடப்பில்லா சொத்துக்கள்** | | | | | |
| சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் | 1 | 547,396 | | 550,705 | |
| நீண்ட கால வரவுகள் | 2 | 757,224 | | 757,224 | |
| துணை மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு | 3 | 1,090,019 | | 1,090,019 | |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | | 28,860 | **2,423,499** | 25,526 | **2,423,474** |
| | | | | | |
| **நடப்பு சொத்துக்கள்** | | | | | |
| சரக்குகள் | 4 | 22,843 | | 20,532 | |
| விற்பனை மற்றும் ஏனைய வரவுகள் | 5 | 81,796 | | 76,972 | |
| முற் கொடுப்பனவு | | 244 | | 1,248 | |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரான | 6 | 3,084 | | 14,071 | |
| | | | **107,967** | | **112,823** |
| **மொத்த சொத்து** | | | **2,531,466** | | **2,536,297** |
| | | | | | |
| **பங்கு மற்றும் பொறுப்புகள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் இருப்புகள்** | | | | | |
| செலுத்திய மூலதனம் | | 966,972 | | 966,972 | |
| பொது இருப்புகள் | | 9,997 | | 9,997 | |
| மறுமதிப்பீட்டின் இருப்புகள் | | 536,119 | | 536,119 | |
| ஈட்டிய வருமானம் | | 301,537 | | 372,864 | |
| | | | **1,814,625** | | **1,885,952** |
| **நடப்பு அல்லாத பொறுப்புகள்** | | | | | |
| நீண்டகால பொறுப்புகள் | 7 | 546,177 | | 492,426 | |
| ஓய்வூதிய பொறுப்பு | 8 | 17,796 | | 18,919 | |
| | | | **563,973** | | **511,345** |
| | | | | | |
| **நடப்பு பொறுப்புகள்** | | | | | |
| கொள்வனவு மற்றும் ஏனைய கொடுப்பனவு | 9 | 124,791 | | 62,857 | |
| வட்டி செலுத்தப்படும் தற்போதய பொறுப்புகள் | | 1,161 | | 53,665 | |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரான | 10 | 26,916 | | 22,478 | |
| | | | **152,868** | | **139,000** |
| **மொத்த பங்கு மற்றும் பொறுப்புகள்** | | | **2,531,466** | | **2,536,297** |

ஒப்பம்,
சீ.ஐ. கருணாதிலக்க
**கணக்காளர்**

ஒப்பம்,
ஜே.கே.என்.சீ. பெரேரா
**கடமை இயக்குனர்**

ஒப்பம்,
என்.எஸ்.எம். சம்சுதீன்
**தலைவர்**

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான அறிக்கை**

(ரூபா. '000)

| | | 2012 | 2011 |
|---|---|---|---|
| வருமானம் | 11 | 361,933 | 656,071 |
| | | | |
| விற்பனை செலவீனம் | 12 | (372,536) | (656,676) |
| | | | |
| **மொத்த இலாபம்** | | **(10,603)** | **(605)** |
| | | | |
| ஏனைய வருமானம் | 13 | 33,330 | 35,623 |
| | | | |
| விற்பனை மற்றும் விநியோக செலவு | | (5,776) | - |
| | | | |
| **நிர்வாக செலவீனம்** | | **(72,540)** | **(16,878)** |
| | | | |
| ஏனைய இயக்க செலவீனங்கள் | | - | (3,995) |
| | | | |
| இயக்க இலபம் - (நட்டம்) | 14 | (55,589) | 14,145 |
| | | | |
| நிதிச் செலவீனம் | 15 | (14,749) | (11,545) |
| | | | |
| **வரிக்கு முன்னரான நஷ்டம்** | | **(70,383)** | **2,600** |
| | | | |
| வரி | | - | - |
| | | | |
| **வரிக்கு பின்னரான இலாபம் - (நஷ்டம்)** | | **(70,383)** | **2,600** |

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு பரிவர்த்தனை அறிக்கை**

(ரூபா‘000)

| | மூலதன பங்களிப்பு | மீள் மதிப்பு ஒதுக்கீடு | பொது ஒதுக்கீடு | மீள் தக்க வைத்த இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2007.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 438,019 | 1,951,107 |
| இவ்வருட இலாபம் (2008) | - | - | - | 8,498 | 8,498 |
| 2008.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 446,517 | 1,959,605 |
| இவ்வருட இலாபம் (2009) | - | - | - | (79,373) | (79,373) |
| 2009.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 367,144 | 1,880,232 |
| இவ்வருட இலாபம் (2010) | - | - | - | 5,074 | 5,074 |
| 2010.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 372,218 | 1,885,306 |
| இவ்வருட இலாபம் (2011) | - | - | - | 2,600 | 2,600 |
| முந்தைய வருட சீராக்கள் | - | - | - | (1,954) | (1,954) |
| 2011.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 372,864 | 1,885,952 |
| இவ்வருட இலாபம் (2012) | - | - | - | (70,383) | (70,383) |
| முந்தைய வருட சீராக்கள் | - | - | - | (944) | (944) |
| 2012.12.31 ம் திகதி மீதி | 966,972 | 536,119 | 9,997 | 301,537 | 1,814,625 |

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

### 2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் தொடர்பான அறிக்கை

| | குறிப்பு | டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவடைந்த வருடம் | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2012 | | 2011 |
| இயக்க நடவடிக்கையில் நிதிப் பாய்ச்சல் | | | | | |
| வரிக்கு முன்னரான நிகர இலாபம் - (நஷ்டம்) | | | (70,383) | | 2,600 |
| பணம் அல்லாத வருமானம் மற்றும் செல்வுச் சீராக்கல்கள் | | | | | |
| தேய்மானம் | 01 | 3,339 | | 562 | |
| மீள் மதிப்பு தொகை | | (944) | | (1,954) | |
| ஊழியர் கடன் வட்டி | | (260) | | (270) | |
| வைப்புகளுக்கான வட்டி | | (3,967) | | (2,419) | |
| ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு | 08 | 1,335 | | 1,385 | |
| | | | (22,975) | | (25,410) |
| நடைமுறைச் சொத்து மற்றும் பொறுப்புகளின் மாற்றங்கள் | | | | | |
| சரக்குகளின் அதிகரிப்பு - (குறைவு) | | 3,409 | | 8,157 | |
| விற்பனை மற்றும் ஏனைய வரவுகள் அதிகரிப்பு – (குறைவு) | | (10,544) | | 42,102 | |
| முற்கொடுப்பனவு அதிகரிப்பு – (குறைவு) | | 1,004 | | (659) | |
| கொள்வனவு மற்றும் ஏனைய கொடுப்பனவு அதிகரிப்பு – (குறைவு) | | 39,456 | | 12,207 | |
| | | | 33,325 | | 61,807 |
| கழித்தல்: | | | (60,033) | | (38,997) |
| செலுத்திய வருமானவரி | | - | | - | |
| செலுத்திய பணிக்கொடை | | (2,458) | | (1,249) | |
| | | | (2,458) | | (1,249) |
| செயற்பாட்டு நடவடிக்கையில் நிகர பணம் - (பயன்படுத்திய) | | | (62,491) | | (37,748) |
| | | | | | |
| முதலீட்டு நடவடிக்கையில் பணப் பாய்ச்சல் | | | | | |
| நிலையான வைப்புகளில் இருந்து கையகப்படுத்தல் | | (30) | | (7,328) | |
| முதலீடுகளின் வட்டி வருமானம் | | 3,967 | | 2,419 | |
| ஊழியர்களின் கடன் வட்டி வருமானம் | | 260 | | 270 | |
| திறைசேரி முதலீடு | | (3,334) | | 42,597 | |
| முதலீட்டு நடவடிக்கையின் மூலம் கிடைத்த நிகர பண வருமானம் | | | 23,341 | | 60,672 |
| | | | | | |
| நிதி நடவடிக்கையில் பணப் பாய்ச்சல் | | | | | |
| குத்தகை முற் கொடுப்பனவு | | (52,504) | | (94,110) | |
| பெற்ற கடன் | | 40,000 | | - | |
| பெற்ற வாடகை முற்பணம் | | 13,751 | | - | |
| நிதி நடவடிக்கையில் பயன்படுத்திய நிகர தொகை | | | 1,247 | | (94,110) |
| | | | | | |
| அதிகரித்த (குறைந்த) பனம் மற்றும் அதற்கு நிகரான நிகர தொகை | 10 | | (37,904) | | 4,310 |
| வருட ஆரம்ப பணம் மற்றும் அதற்கு நிகரான | | | 14,072 | | 9,762 |
| வருட இறுதியில் பணம் மற்றும் அதற்கு நிகரான | 10 | | (23,832) | | 14,072 |

**குறிப்பு:**இந் நிதிப்பாய்ச்சல் அறிக்கையானது மறைமுகமாக விவரிக்கப்பட்ட மற்றும்எல்கேஎஸ் 07 தரத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைக் குறிப்புகள்.**

**குறிப்பு 01**
**உடமை, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்**
**கொள்விலை**

| **தேய்மானம்** | **2012.01.01 மிகுதி** | **வருடத்திற்கான தேய்மானம்** | **வருடத்திற்கான வெளியேற்றம்** | **2012.12.31 மிகுதி** |
|---|---|---|---|---|
| நிலம் மற்றும் கட்டிடம் | 538,003,481 | - | - | 538,003,481 |
| மோட்டார் வாகனம் | 18,490,035 | - | - | 18,490,035 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 5,216,776 | 6,450 | - | 5,223,226 |
| ஆயுதம் மற்றும் நகரும் உபகரணங்கள் | 1,073,323 | 23,550 | - | 1,096,873 |
| **மொத்தம்** | **562,783,615** | **30,000** | **-** | **562,813,615** |
| | | | | |
| ***மதிப்பிடப்பட்ட தேய்மானம்*** | | | | |
| நிலம் மற்றும் கட்டிடம் | 207,421 | 20,742 | - | 228,163 |
| மோட்டார் வாகனம் | 7,573,462 | 2,766,090 | - | 10,339,552 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 3,274,953 | 487,930 | - | 3,762,883 |
| ஆயுதம் மற்றும் நகரும் உபகரணங்கள் | 1,022,462 | 64,641 | - | 1,087,103 |
| **மொத்தம்** | **12,078,298** | **3,339,403** | **-** | **15,417,701** |

2008 பெப்ரவரி 25ம் திகதி இலக்கம் 287, காலி வீதி, கொழும்பு-03.ல் அமைந்துள்ள சொத்தை ரூபா 172,000,000 கடன் பெறுவதற்காக இலக்கம் 2426 அடகுப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது. இந் நிலத்தின் மதிப்பிற்கு நிலம் மற்றும் கட்டிடம் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பாலாவி பிரதேசத்தில் அமைந்துள்ள 221 காட்டு நிலப்பகுதியின் பெறுமானத்தை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதன் செயற்பாடு முடிவடைந்ததும் கணக்கில் காட்டப்படும்.

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**

**நிதி அறிக்கைக் குறிப்புகள்.**

| 2011 | | 2012 |
|---|---|---|
| | **குறிப்பு 02 – நீண்டகால வருமானம் - ரூபா 757,223,883** | |
| 424,169,977 | எல்சீஎல் நிறுவனத்திற்காக குறுகிய மற்றும் நீண்டகால கடன் | 424,169,977 |
| 333,053,906 | எல்சீஎல் மற்றும் எஸ்எல்சீசீ இடையிலான உள்ளக பரிமாற்றங்கள் | 333,053,906 |
| **757,223,883** | | **757,223,883** |
| | **குறிப்பு 03 – துணை மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு ரூபா 1,090,018,910** | |
| | ஐந்தொகையில் லங்கா சீமெந்து லிமிட்டின் பங்கொன்றின் சந்தை பெறுமதியானது ரூபா. 23.25 ஆகும். 2011ஆம் ஆண்டில் பங்கொன்றின் பெறுமானம் அதிககரித்ததுடன், 2012ஆம் ஆண்டில் அதன் ஆகக்கூடிய விலையானது ரூபா 34 ஆகும். | |
| | துனை நிறுவனம் - லங்கா சீமெந்து லிமிடட் | |
| 1,083,618,910 | ரூபா 10 பெறுமதியான பங்குகள் 108,361,891 கொண்டள்ளதுடன், அதன் மூலதன விகிதாசாரமானது 62.45 ஆகும். | 1,083,618,910 |
| | லபார்ஜ் சீமெந்து நிறுவனம் | |
| 6,400,000 | ரூபா 15 பெறுமதியான 320,000 பங்குகள் மற்றும் 160,000 பங்குகள் 1995 ஆம் ஆண்டு போனஸாக வழங்கப்பட்டது | 6,400,000 |
| **1,090,018,910** | | **1,090,018,910** |
| | **குறிப்பு 04 – சரக்குகள் - ரூபா 17,123,489** | |
| 5,349,307 | மூலதனக் கையிருப்பு மற்றும் நடைமுறையில் உள்ள கொன்கிறீட் வேலைகள் | 3,856,289 |
| 9,424,700 | முடிவடைந்த கொன்கிறீட் தூண்கள் மற்றும் ஏனைய இருப்புகள் | 10,051,000 |
| 37,741 | சீமெந்து இருப்பு | 3,216,200 |
| 14,811,748 | | 17,123,489 |
| | குறிப்பு 05 – விற்பனை மற்றும் ஏனைய வருமானம் - ரூபா. 87,515,965 | |
| 65,401,957 | தலைமை அலுவலகம் | 60,439,022 |
| 11,569,564 | காங்கேசன் சீமெந்து ஆலை (யாழ்ப்பாணம்) | 21,357,157 |
| 5,719,777 | புத்தளம் சீமெந்து ஆலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கு சொந்தமான 1990ஆம் ஆண்டு கொள்வனவு செய்த உதிரிப்பாகங்கள். | 5,719,777 |
| | **குறிப்பு – 6 பணம் மற்றும் அதற்கு சமமான - ரூபா 3,084,430** | |
| 278,454 | மக்கள் வங்கி – சர்வதேசக் கிளை | 253,954 |
| - | மக்கள் வங்கி – லிபர்டி ப்ளாஸா | 1,109,822 |
| 22,046 | மக்கள் வங்கி – வவுனியா | 22,046 |
| 11,388,824 | இலங்கை வங்கி – பிரதான கிளை | - |
| 2,346,995 | இலங்கை வங்கி – கொம்பனித் தெரு | 1,663,811 |
| 34,797 | கொமர்ஷல் வங்கி – யூனியன் பிளேஸ் - யாழ்ப்பாணம் | 34,797 |
| **14,071,116** | | **3,084,430** |
| | **குறிப்பு 07 – நீண்டகால பொறுப்பு - ரூபா 546,177,203** | |
| - | தலைமை காரியாலயம் செலுத்துதல் | 53,258,311 |
| 492,426,190 | திறைசேரி செலுத்துதல் | 492,426,190 |
| - | காங்கேசன் சீமெந்து ஆலை | 492,703 |
| **492,426,190** | | **546,177,204** |
| | ஹொல்சிம் லங்கா நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய புத்தளம்,அருவாக்காலு நிலத்திற்கான குத்ததைப்பணம் இலங்கை வங்கிக் கணக்கில் இட்ரால் டிரேற் இன்டரநெஷனல் ருளுயு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடனுக்காக வைப்பிலிடப்படும் - இதன் கால எல்லை 2013 ஆம் ஆண்டிலிருந்து 5 வருடங்களாகும். | |
| | **குறிப்பு 08**– பணிக்கொடுப்பனவு கீழ் வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது | |
| 18,783,093 | ஓய்வூதியக் கொடுப்பனவு ஏற்பாடுகளின் மிகுதி | 18,918,853 |
| (1,249,433) | 2012ஆம் ஆண்டில் 3 ஊழியர்களுக்கு செலுத்திய கொடுப்பனவு | (2,457,018) |
| 17,533,660 | 2012.12.31 திகதியில் மிகுதி | 16,461,835 |
| 1,385,193 | வருடத்திற்கான ஏற்பாடு | 1,334,555 |
| **18,918,853** | 2012.12.31 தி.மு.ஆ. 62 ஊழியர்களுக்கான மதிப்பீட்டு ஏற்பாடு | **17,796,390** |

**2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைக் குறிப்புகள்.**

| 2011 | | 2012 |
|---|---|---|
| | <u>குறிப்பு 9 –கொள்வனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்-</u> ரூபா. 124,791,483 | |
| 16,785,357 | காங்கேசன் சீமெந்து ஆலை (யாழ்ப்பாணம்) | 10,688,398 |
| 85,332,912 | | |
| | <u>குறிப்பு 10 –பணம் மற்றும் அதற்கு சமமான (விரும்பத்தகாத)</u> - ரூபா. 26,916,194 | |
| - | மக்கள் வங்கி – யாழ்ப்பாணம் | 792,813 |
| - | இலங்கை வங்கி – பிரதான கிளை | 26,123,381 |
| - | | 26,916,194 |
| | <u>குறிப்பு– 11 –வருமானம் - ரூபா. 361,933,397</u> | |
| 649,210,889 | சீமெந்து விற்பனை – கொழும்பு | 336,315,047 |
| 6,860,513 | கொன்கிறீட் உற்பத்தி விற்பனை – யாழ்ப்பானம் | 25,618,350 |
| 656,071,402 | | 361,933,397 |
| | <u>குறிப்பு– 12 –விற்பனைச் செலவீனம் - ரூபா. 372,536,046</u> | |
| 644,387,464 | சீமெந்து விற்பனை செலவீனம் - கொழும்பு | 343,472,460 |
| 12,288,400 | கொன்கிறீட் உற்பத்தி விற்பனை செலவு – யாழ்ப்பாணம் (கொங்கிறீட் பொருட்களின் உற்பத்தி செலவுகளை நேரடி ஊழியர் செலவான ரூபா. 10,736,115 மில்லியன் ரூபாவில் உள்ளக்கப்பட்டுள்ளது.) | 29,063,586 |
| **656,675,864** | | **372,536,046** |
| | <u>குறிப்பு– 13 –ஏனைய செயற்பாட்டு வருமானம் - ரூபா. 33,330,465</u> | |
| 22,713,936 | அகழ்வு நில குத்தகை | 22,478,228 |
| 2,418,587 | வைப்புகளுக்கான வட்டி | 3,967,011 |
| 270,346 | ஊழியர் கடன்களுக்கான வட்டி | 259,660 |
| 756,697 | சிறு வியாபாரம் | 861,735 |
| 3,500,000 | எண்ணெய் சூடாக்கி | (200,000) |
| 5,963,831 | ஆலை மின்சார திட்டம் | 5,963,831 |
| **35,623,397** | | **33,330,465** |
| | <u>குறிப்பு– 14 –வரிக்கு முன்னரான ஆதாயம் - ரூபா. (70,382,929)</u> | |
| | வரிக்கு முன்னரான இலாபத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகள் செலவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| | ஊழியர் செலவு | 16,688,428 |
| | பணிப்பாளர்களின் வேதனம் | 369,000 |
| | தேய்மானம் | 3,339,403 |
| | சேதமடைந்த களஞ்சியம் | 9,100,000 |
| | கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடு | 1,334,556 |
| | | |
| | **மாதாந்த வேதனம்** | |
| | ரூபா 45,000 - ரூபா 40,000 | |
| | ரூபா 40,000 - ரூபா 35,000 – 02 | |
| | ரூபா 35,000 - ரூபா 30,000 – 01 | |
| | ரூபா 30,000 - ரூபா 25,000 – 27 | |
| | ரூபா 25,001 - ரூபா 20,000 – 29 | |
| | ரூபா 20,000 - ரூபா 15,000 – 04 | |
| | ரூபா 15,000 - ரூபா 10,000 – 06 | |
| | மொத்தம் 69 | |
| | | |
| | <u>குறிப்பு– 15 –நிதிச் செலவீனம் - ரூபா. 3,458,588</u> | |
| 3,693,058 | மேலதிக பற்று வட்டி | 3,394,384 |
| 7,851,487 | மேலதிக கடன் வட்டி | 11,399,831 |
| **11,544,545** | | **14,794,215** |



**தலைவர்**

**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) பிரிவின் நியதிகளின்படி 2012 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆய்வுக்குட்படுத்திய நிதியறிக்கையானதுவிரிவான வருமான அறிக்கை,பங்கு மாற்றங்களின் அறிக்கை,வருட இறுதியில் நிதிப் பாய்ச்சல் அறிக்கை,மற்றும் கணக்கியற் கொள்கை விவரணம் ஆகியவை எனது மேற்பார்வையின் கீழ் பந்தி இலக்கம் 154 (1), இற்கு அமைவாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பிற்கு அமைய 1971 ம் ஆண்டு 29ம் இலக்க நிதிச் சட்டத்தில் மற்றும் 1957ஆம் ஆண்டு 49ம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் காணப்படும் 14(2)(இ) பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தின் ஆண்டிற்கான நிதி அறிக்கையில் எனது கருத்துக்கள் பதியப்படுள்ளன.கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கான விரிவான அறிக்கை இலக்கம் 13 (7) (அ) நிதிச் சட்டத்திற்அமைவாக 2013 செப்டம்பர் 30ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

**1.2. நிதி அறிக்கை தொடர்பாக முகாமையாளர்களின் பொறுப்பு**

மோசடி மற்றும் பிழைகள் அற்ற விதத்தில் உள்ளக நிர்வாக கட்டமைப்பு போன்ற பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கணக்கியல் கொள்கைகளை பயன்படுத்திவெளிப்படுத்துவது அத்தியாவசியம் என முகாமையாளர்களினால் கருதப்படும்அனைத்து விடயங்களையும் உரிய முறையில் நியாயமாக சமர்ப்பிப்பது முகாமையாளர்களின் கடமையாகும்.

**1.3. ஆய்வாளர்களின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு தரத்திற்கு அமைவாக இவ் ஆய்விற்கு உட்படுத்திய நிதி அறிக்கை தொடர்பாககருத்தொன்றை வெளியிடுவது எனது கடமையாகும். காரணம் அபிப்பிராயங்களை நிராகரிக்கும் பந்தியில்விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது, எவ்வாறாயினும்,போதுமான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் என்னால் கருத்துகளை தெரிவிக்க முடியாது.

**1.4 கருத்துக்களை நிராகரித்தல்**

இந்த அறிக்கையின் 2.2.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டதற்கிணங்க, நிதி நிலையின் அறிக்கைகளை உருவாக்குவதில் அல்லது பதியப்பட்ட அல்லது பதியப்படாத தரவுகளில், பரந்தளவிளான வருமான அறிக்கைகள், பங்கீடு, நிதிப்புழக்கம் என்பவற்றில் ஏதாவது மாற்றங்கள் காணப்படுகின்றனவா என்பதனை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

**2. நிதி அறிக்கை**

**2.1 கருத்துக்களை நிராகரித்தல்**

இந்த அறிக்கையின் 2.2.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டதற்கிணங்க, என்னால் தேவையான மற்றும் பொருத்தமான கணக்காய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனால் என்னால் இந்த நிதி அறிக்கைகள் தொடர்பில் எந்த கருத்தினையும் வெளியிட முடியாதுள்ளது.

**2.2 நிதி அறிக்கை தொடர்பான அபிப்பிராயம்**

**2.2.1 ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள்**

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் இந்த நிறுவனத்தின் 62.45 பங்குகளைப் பெற்றிருந்த போதும் ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் கணக்கீட்டு முறைமைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படவில்லை.



**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

வங்கிக் கடனாக ரூபா. 26,916,193 மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கும் நிலத்தை அடகுவைத்து ரூபா.40,000,000 ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளதோடு வங்கிக் கடன் மற்றும் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்காக செய்யப்பட்ட வைப்பு தொடர்பான எந்தத் தகவல்களும் நிதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

1) ரூபா, 5,096,661 பெறுமதியான கட்டடம், தளபாடங்கள், வாகனங்கள் என்பன தேய்மானம் அடைந்துள்ளன, எனினும் பாவனையில் உள்ள தற்போதையவை பெறுமதி கணிக்கப்படவுமில்லை அவை கணக்கிற்குக் கொண்டுவரப்படவுமில்லை.

2) 02 டிரக்டர்கள், 03 டிரய்லர்கள், மற்றும் 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் என்பன ரூபா.5,719,771 செலவில் 1990 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு அவை புத்தளத்திலுள்ள சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்பான அறிக்கைகள் கணக்கில் காட்டப்படவில்லை.

### 2.2.4 விபரிக்கப்படாத மாற்றங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1) யாழ்ப்பாணம் கிளையின் நிதி அறிக்கை மற்றும் முன்கொண்டு வரப்பட்ட மிகுதியின் வித்தியாசம் ரூபா.5,424,828 ஆகக் காணப்படுகின்றது.

2) நிதி அறிக்கைக்கு பிரதான காரியாலயத்தின் ஏற்ப வியாபாரம் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் மிகுதியாக ரூபா.114,103,084 காணப்படுகின்றது, அதே நேரம் ஆண்டு ஒப்பீட்டுக்கு ஏற்ப அது ரூபா 113,031,656 ஆகக் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் வித்தியாசம் ரூபா 107,1428 ஆக காணப்படுகின்றது.

### 2.2.5 கொடுப்பனவு மற்றும் வருவாய் மிகுதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1) வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்க மிகுதிகளின் இந்த ஆண்டுக்கான பெறுமதி ரூபா 839,200,063 ஆகும், அவற்றில் ரூபா 13,435,491 இரண்டு வருடங்களுக்கு முற்பட்டதும்,ரூபா 35,307,781 மூன்று வருடங்களுக்கு முற்பட்டதாகவும் காணப்படுகின்றது.

2) இந்த வருடத்தின் இறுதித் திகதியில் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தல்களின் பெறுமதி ரூபா 616,960,673 ஆகும். அவற்றில் ரூபா 5,286,079 இரண்டு வருடங்களுக்கு முற்பட்டதாகவும்,ரூபா 22,526,199 மூன்று வருடங்களுக்கு முற்பட்டதாகவும் காணப்படுகின்றது.

### 2.2.6 கணக்காய்வின் போதான ஆதாரங்களின் குறைபாடுகள்

கணக்காய்வின் போது காண்பிக்கப்பட்ட பின்வரும் கணக்குகள் மற்றும் தரவுகள் திருப்திகரமானவையாக இல்லை. ஆதாரங்கள் காண்பிக்கப்படாததன் காரணமாக நிராகரிக்கப்பட்ட கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| பொருள் | பெறுமதி (ரூபா) | ஆதாரங்கள் இல்லை |
|---|---|---|
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 547,395,912 | நிரந்தரமான சொத்துக்கள் பற்றிய குறிப்பு, கணக்கு அறிக்கைகள் திணைக்களம் |
| இருப்பு | 22,843,266 | இருப்புக்களை உறுதிப்படுத்தும் அறிக்கைகள் |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்க மிகுதிகள் | 81,796,180 | மிகுதியை உறுதிப்படுத்தல் |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மிகுதிகள் | 124,791,483 | |
| வங்கிக் கடன் | 26,916,194 | |
| கையிருப்பில் இல்லாத பொறுப்புக்கள் | 563,973,594 | |
| தற்போதைய பொறுப்புக்கள் | 125,952,196 | |
| நீண்ட காலக் கடன்கள் (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) | 757,223,883 | |
| வங்கி மிகுதி | 3,084,430 | மிகுதியை உறுதிப்படுத்தல் |

**2.2.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத்தின் முடிவுகளுடன் இணங்கியொழுகாமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்கியொழுகாமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் முதலியன பற்றிய குறிப்பீடு | விபரங்கள் |
|---|---|
| 1) நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் 2009 இன் இல.9 | நாட்டைக் கட்டியெழுப்பும் வரியின் ரூபா 6,850,515 ஆனது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் அது செலுத்தப்படவில்லை. |
| 2) 2002 இன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்ட இல.14 இன் பிரிவு 2.1 | 1. கணக்கெடுப்பில் உள்ள இந்த வருடத்திற்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது ரூபா 4,752,790 ஆக காணப்படுகின்ற போதும் அது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் ஆணையாளருக்குச் செலுத்தப்படவில்லை.<br><br>2. ரூபா 6,431,738 ஆக காணப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பெறத்தக்கவைகளை செயற்படுத்துவதற்காக இறைவரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| 3) 1990 இன் நிதிச் சட்டத்தின் இல.6 இன் 3ஆம் பகுதி | வருமான வரியான ரூபா 7,101,932 ஆனது மேல் மாகாண வருவாய் ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் அது செலுத்தப்படவில்லை. |
| 4) நிதி ஒழுங்குகள் 756 | கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு இந்த வருடத்திற்கான அறிக்கைகள் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் அவை மேற்கொள்ளப்படவில்லை. |
| 5) திறைசேரி சுற்றுநிருபம் 2002 நவம்பர் மாதத்தின் இல.1ஏ1∴2002∴02 | கணினிகள், கணினி உபகரணங்கள், மென்பொருட்கள் தொடர்பான சொத்து அறிக்கைகள் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

முன்வைக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைக்கு ஏற்ப நிறுவனத்தின் செயற்பாடுகளின் இந்த வருடத்தின் செயற்பாடுகள் மூலம் துண்டுவிழும் தொகையாக ரூபா 70,382,929 காணப்படுகின்றது. அதே நேரம் கடந்த ஆண்டுக்கான தொகையாக ரூபா 2,600,231 உம் காணப்படுகின்றது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் துண்டு விழும் தொகையானது ரூபா 72,983,160 அல்லது 2.807மூஆல் மோசமடைந்துள்ளது.

### 3.2 ஒப்பிடப்பட்ட நிதிசார் பெறுபேறுகள்

சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது ஏற்பட்ட ரூபா 72,983,160 ஆல் அதிகரித்து மோசமாக மாறியிருக்கும் இந்த வருடத்தின் துண்டுவிழும் தொகைக்கான காரணிகளாக பின்வருபவை இனங்காணப்பட்டுள்ளன.

1. ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையான ரூபா 38,704,160 மற்றும் இந்த வருடத்திற்கான நிதிசார் செலவீனங்களின் தொகையான ரூபா 3488588.

2. குறித்த வருடத்திற்கான விற்பனை வருமானத்தை கடந்த வருடத்தின் விற்பனை வருமானமான ரூபா 294,138,005 அல்லது 45 சத விகித்ததுடன் ஒப்பிட்டுப்படப்பட்டள்ளது.

3. இந்த வருடத்திற்கான மொத்த விற்பனை மற்றும் விற்பனை தொடர்பான செலவுகள் ரூபா 361,933,397 மற்றும் ரூபா 383,935,878 ஆக காணப்படுவதோடு இது மொத்த நஷ்டமாக ரூபா 22,002,481 இனை ஏற்படுத்தியுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 அடைவுகள்

கீழ்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

1. காங்கேசன்துறை சீமெந்து கொங்கிரீட் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் மூலம் வரும் இலாபத்தினை விட நஷ்டம் தொடர்ச்சியாக காணப்படுகின்றது. இந்த ஆண்டு மற்றும் இதற்கு முன்னுள்ள ஐந்து வருடங்களுக்கான நஷ்டத்தின் தொகை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | வரவு | செலவு | நஷ்டம் |
|---|---|---|---|
| | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| 2007 | 1.54 | 21.06 | 19.52 |
| 2008 | 17.92 | 24.78 | 6.86 |
| 2009 | 36.89 | 43.99 | 7.10 |
| 2010 | 27.33 | 27.36 | 0.03 |
| 2011 | 6.86 | 16.28 | 9.42 |
| 2012 | 32.46 | 38.12 | 5.66 |

2. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மூலம் 121,000 மெட்ரிக் தொன்கள் சீமெந்து விற்பனை மூலம் வருமானமாக ரூபா 1,597,200,000 பெற உத்தேசிக்கப்பட்டது. இருப்பினும் விற்பனை ரூபா 361,933,397 மாத்திரமே ஆகும், இது எதிர்பார்க்கப்பட்ட விற்பனையின் 23 வீதம் மாத்திரமே ஆகும். நிறுவனம் எதிர்பார்த்த விற்பனையை எந்த ஒரு மாதத்திலும் பெற்றுக்கொள்ளவில்லை. இந்த ஆண்டின் விற்பனையானது அந்த அளவுக்கு மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது.

3. மாதாந்தம் 400 கென்டய்னர்கள் சீமெந்து ஏற்றுமதி செய்தல், கொள்ளுபிட்டிய நிலத்தில் ஒரு கட்டடம் அமைத்தல், சீமெந்து தூண்கள் உற்பத்தியினை காங்கேசன்துறை தொழிற்சாலையில் வருடத்திற்கு 3,000 ஆக அதிகரித்தல், நிறுவனத்தின் அடைவுகளை துரிதப்படுத்தும் நோக்கத்தில் காங்கேசன்துறையில் ஒரு சீமெந்து பொதியிடும் நிலையத்தை 2012 அமைத்தல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்த வருட முடிவில் கூட எந்த ஒன்றையேனும் நிறைவேற்ற முடியவில்லை.

### 4.2 முகாமைத்துவத் திறனற்ற நிலை

கீழ்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் அறுவாக்காலு பிரதேசத்தைச் சூழ 5,352 ஏக்கர் நிலப்பரப்பை சுண்ணக்கல் அகழ்வதற்காக தனியார் சீமெந்து உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு 50 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது. ஒப்பந்தத்திற்கு ஏற்ப வருடாந்தம் ரூபா 22,478,228 ஆகும். ஒப்பந்தத்திற்கு ஏற்ப நிறுவனத்திற்கு குத்தகைக் காலமாகிய 50 வருட காலத்திற்குள் குத்தகையில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது. இது தொடர்பாக 16 ஆகஸ்ட் 2011 இல் இடம்பெற்ற கூட்டத்தில் பொது நிறுவனக் குழு பேச்சுக்கள் நடாத்தி மாற்றங்கள் மேற்கொள்வது என முடிவுகள் எடுக்கப்பட்ட போதும் 31 ஆகஸ்ட் 2013 வரை எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

2. புத்தளம், பாலாவி, கல்லடி போன்ற இடங்களை இணைத்துக் காணப்படும் 150 ஏக்கர் பரப்பளவுடைய நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம் எந்த வித பயன்பாடுமற்று காணப்பட்டது. இவற்றுள் 9 ஏக்கர் நிலப்பரப்பானது ஒரு தனிநபரால் எந்த விதமான ஒரு அனுமதியுமின்றி வீடுகள் அமைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளது. இத்தகைய முற்றுகைகள் குறிப்பிட்ட இடங்கள் நீண்ட காலமாக பாவனையற்றுக் காணப்படுவதனால் வளர்ந்து காணப்படும் மூடு பயிர்களின் காரணமாக தவிர்க்க முடியாதவையாக மாறியுள்ளன.

3. ஒரு விற்பனை முகவரால் 5,100 பக்கெட்டுக்களுக்காக கொடுக்கப்பட்ட ரூபா 1,656,000 பெறுமதியான காசோலை ஏற்கப்படவில்லை. 11 பெப்ரவரி 2008 அன்று இந்தப் பணத்தை சட்டரீதியான வட்டியுடன் மீளப்பெறுவதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. முகவரின் சொத்துக்கள் மற்றும் பொருட்கள் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட போதும் அந்தப் பொருட்களை ஏலமிடுவதன் மூலமேனும் இழந்த பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

4. கடன் பரிமாற்றம் செய்வதற்கு முன்னர் முகவர்களிடம் அந்தத் தொகைக்கு ஏற்ற ஒரு உறுதியைப் பெற்றுக்கொள்ளாமை, ஒப்பந்தங்களில் கடன் எல்லை வரையறுக்கப்படாமை, ஒப்பந்தத்தில் செலுத்தப்படாத கடன்களைப் பெற்றுக்கொள்ளும் முறை குறிப்பிடப்படாமை, ஒழுங்கற்ற முறையில் கடன்களை வழங்கும் அலுவலர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை போன்ற முகாமைத்துவத்தின் திறனற்ற நிலைகள் காரணமாக காணப்பட்டும் அறவிட முடியுமான கடன்களின் தொகை ரூபா 44,467,236 ஆக காணப்படுகின்றது. இவற்றில் ரூபா 3,832,137 ஆனது 9 வருடங்களுக்கு மேலாகக் காணப்படுகின்றது.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 1,088,418,910 இனை இரண்டு தனியார் நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கும் நிறுவனம் இந்த வருடம் வரை எந்த விதமான வருமானத்தினையும் இதன் மூலம் பெற்றுக்கொள்ளவில்லை.

### 4.4 ஒரு சர்வதேச நிறுவனத்திற்கு நஷ்டஈடு செலுத்தல் - 300,000 அமெரிக்க டொலர்கள்

நிறுவனம் களிங்கர் இறக்குமதி, சீமெந்து உற்பத்தியை செய்வதற்கான உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்தல் போன்ற நோக்கத்திற்காக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சர்வதேச நிறுவனம் ஒன்றுடன் இரண்டு ஒப்பந்தங்களை 1990 ஆண்டு மேற்கொண்டது. ஒப்பந்தத்திற்கு இணங்க நிறுவனம் 475,000 அமெரிக்க டொலர்களைச் செலுத்தியதோடு தேசிய வங்கி ஒன்றிடம் கிளிங்கர் இறக்குமதிக்காக கடன் பெற்றுக்கொண்டது.

அந் நிறுவனம் கிளிங்கரை ஒப்பந்தத்திற்கு ஏற்ப விநியோகிக்கத் தவறிய நிலையில் கடன் எல்லையானது நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இரு முறைகள் நீடிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் கூட்டுத்தாபனம் மற்றும் நிறுவனத்திற்கு இடையில் சிக்கலான நிலைமை இழப்பினைக் குறைப்பதற்காக ஒரு மாற்றம் மேற்கொள்ள முனைந்ததன் காரணமாக ஏற்பட்டது. இரு தரப்பினாலும் சிக்கலை முடிவுக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது சுமுகமான முடிவுக்கு இட்டுச்செல்லவில்லை.

அதே நேரம் நிறுவனம் சார் அமைச்சு மற்றும் வழக்கறிஞர்கள் குழு சந்திப்பை 2002 ஆம் ஆண்டில் மேற்கொண்டது. இரு தரப்பினருக்கும் இடையான ஒப்புதல் அடிப்படையில் உலக வங்கியின் சர்வதேச ஒப்புதல் நிறுவனத்தின் தலையீட்டுக்கு ஏற்ப தனியார் மயப்படுத்தப்பட்ட புத்தளம் சீமெந்து நிறுவனத்துடன் இணைந்து 1.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்துவதற்கு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது. அதே நேரம் நிறுவனம் தனது 1 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்திய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் நிதி நெருக்கடிகள் காரணமாக பணத்தை செலுத்தமுடியாது போனது. இருப்பினும் இலங்கை தொடர்பில் வெளிநாடுகளின் பார்வை மோசமாக மாறிவிடக்கூடாது என்ற அபிப்பிராயத்தின் பேரில் அமைச்சரவையால் 01-11-2012 இல் திறைசேரியின் நிதியிலிருந்து அந்த தொகையை வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அதற்கேற்ப ரூபா 38,704,668 அமெரிக்க டொலர்களில் 300,000 ஆனது வங்கிகளின் உதவியுடன் இந்த ஆண்டில் வழங்கப்பட்டது. (300,000 அ. டொலர்களுக்குச் சமமான ரூபா 38,704,668 இலங்கை சீமெந்துக் கூட்டுத்தானத்தால் வழங்கப்பட்டுள்ளது.)

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1. இலங்கை நுகர்வோர் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் காரணமாக டீளஉஉ களஞ்சியசாலையில் 6,036 சீமெந்துப் பக்கெட்டுகளும், பேலியகொட நிலையத்தில் 8,295 பக்கெட்டுக்களும் முற்றுகை இடப்பட்டன. இதன் மூலம் நிறுவனம் ரூபா 9,100,000 பெறுமதியான செறிமானப்படுத்தப்பட்ட சீமெந்தினை இழந்து நஷ்டமடைந்தது.

2. வங்கிக்கடன் கால எல்லை முடிவடைந்ததன் காரணமாக ஏற்பட்ட வட்டியின் பெறுமானம் ரூபா 3,395,384 முறையற்ற நிதி அறிக்கைகள் காரணமாக வழங்கப்பட்டுள்ளது.

3. 28,249 மெட்ரிக் தொன் அல்லது 576,156 பக்கெட்டுக்கள் சீமெந்து இந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 221 பக்கெட்டுக்கள் தவறுதலாக வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக நிறுவனம் ரூபா 163,578 இனை நஷ்டமாகப் பெற்றுள்ளது.

### 4.6 குறை பாவனைக்குற்படுத்தப்படும் சொத்துக்கள்

நிறுவனம் ரூபா 550,000 பெறுமதியான கன்வேயர் இயந்திரத்தினை 2011 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்திருப்பதோடு அதற்கான உதிரிப்பாகங்களை ரூபா 27,429 இற்கு கொள்வனவு செய்துள்ளது. இருப்பினும் இந்த இயந்திரம் வாங்கப்பட்ட அந்த தினத்திலிருந்து எந்த வித பாவனையும் அற்று கைவிடப்பட்டுள்ளது.

### 4.7 அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள்

பொது கூட்டுத்தாபனத்தின் வளங்கள் எந்த ஒரு அமைச்சாலும் பயன்படுத்தப்பட முடியாது என்ற அம்சம் அறியப்பட்டிருப்பினும், அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,800,000 பெறுமதியான மோட்டார் வாகனம் தொடர்புடைய அமைச்சால் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## 5. பொறுப்பு மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1 நிதி அறிக்கைகளை முன்வைத்தல்

ஆய்வில் உள்ள இந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கை என்பன நிதி வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தம் இருந்தும் கூட 2012 ஆம் ஆண்டிற்கான அறிக்கைகள் 15 ஆகஸ்ட் 2013 அன்று 05 மாதங்கள் தாமதமாகவே கொடுக்கப்பட்டன.

### 5.2 கூட்டுநிறுவனத் திட்டம்

2011 முதல் 2015 வரையான 05 வருடகாலத்திற்கான நிறுவனத்திட்டம் தயார்படுத்தப்பட்ட போதும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள், நோக்குகள், அடைவுகள் என்பவற்றை அடைந்துகொள்வதற்கு போதுமான எந்த நடவடிக்கைகளோ முயற்சிகளோ மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு முன்னர் கூட்டுத்தாபனமே சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் ஒரேயொரு நிறுவனமாகக் காணப்பட்ட போதிலும் தற்போது அது சீமெந்து இறக்குமதி செய்வதோடு மாத்திரம் தன்னைச் சுருக்கிக் கொண்டுள்ளது. அத்தோடு நிறுவனத் திட்டங்கள் மற்றும் அடைவுகள் என்பன நேர அடிப்படையில் மேற்கொள்ளப்படுவது அவசியமாக இருக்கின்ற போதிலும் இதுவரை இந்த ஆண்டுக்கான திட்டங்கள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

### 5.3 கொள்முதல் திட்டங்கள்

02 யூன் 2003 பொது நிறுவன சுற்றுநிருப இலக்கம் "நுனு.'.12 இற்கு இணங்க நிறுவனம் 2012 ஆம் ஆண்டிற்கு எந்த விதமான கொள்முதல் திட்டங்களையும் மோற்கொள்வில்லை.

### 5.4 ஆளணி முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டில் ஆளணி தொடர்பான அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொழிலாளர்கள் வகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை | சரியான தொகை | வெற்றிடங்கள் எண்ணிக்கை | அதிகம் |
|---|---|---|---|---|
| நிர்வாகத்துறை சார் | 07 | 08 | ---- | 01 |
| நிர்வாகத்துறை சாரா | 24 | 16 | 08 | ---- |
| ஏனையவர்கள் | 45 | 38 | 07 | ---- |
| **மொத்தம்** | **76** | **62** | **15** | **01** |

ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு அதிகரித்த நிர்வாக அதிகாரியின் இருப்பு பிரச்சினைக்குரியதாக இருக்கும் அதேவேளை வெற்றிடங்களாக காணப்படும் 08 நிர்வாகத்துறை சாரா உறுப்பினர்கள் மற்றும் 07 ஏனைய ஊழியர்களின் தேவை நிறுவனத்தின் சரியான செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைகின்றன. இருப்பினும் முகாமைத்துவம் இதனை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளினை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இந்த வருடத்தில் மேற்கொள்ளவில்லை.

### 5.5 வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு

வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்படும் தரவுகள் மற்றும் உண்மையான தரவுகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் நிர்வாகத்துறைக் கட்டுப்பாட்டுக்கு ஒரு சிறந்த ஊடகமாக வரவு செலவுத் திட்டமானது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**6. முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வுக்கு உட்படுத்தும் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் காணப்படும் தேய்மானங்கள் தொடர்பான தகவல்கள் தலைவரின் அவதானத்திற்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டன. கீழ்வருகின்ற அம்சங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. கணக்கு
2. செலுத்தவேண்டிய மற்றும் பெற வேண்டிய கடன்கள்
3. நிலையான சொத்துக்களைப் பராமரித்தல்
4. களஞ்சியசாலைகள் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் நாயகம்

1971 ஆம் ஆண்டின் நிதிச் சட்ட இலக்கம் 38 இன் 14(2)ஊ பகுதிக்கு ஏற்ப 31ஆம் திகதி டிசம்பர் மாதம் 2012 உடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கைகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**2.2 நிதி அறிக்கை தொடர்பான கருத்துக்கள்** **பணிப்பாளரின் கருத்துக்கள்**

| | |
|---|---|
| **<u>2.2.1 ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள்</u>**<br>இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் இந்த நிறுவனத்தின் 62.45 பங்குகளைப் பெற்றிருந்த போதும் ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் கணக்கீட்டு முறைமைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படவில்லை. | ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளை தயார்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது முடிவடைந்த உடனே எம்மால் அதனை கணக்காளர் நாயகத்திடம் ஒப்படைக்க முடியுமானதாக இருக்கும். |
| **<u>2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்</u>**<br>வங்கிக் கடனாக ரூபா. 26,916,193 மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கும் நிலத்தை அடகுவைத்து ரூபா.40,000,000 ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளதோடு வங்கிக் கடன் மற்றும் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்காக செய்யப்பட்ட வைப்பு தொடர்பான எந்தத் தகவல்களும் நிதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. | 1990 இல் 40 மில்லியன்களாக மிகுதி காணப்பட்டது. மக்கள் வங்கியிடம் பெறப்பட்ட கடனை அடைப்பதற்காக ஹொல்சிம் நிறுவனத்திற்கு சுண்ணக்கல் சேகரிப்பு நிலையத்தை குத்தகைக்கு விடப்பட்டதன் மூலம் பெறப்பட்டது.எதிர் காலத்தில் அதனை கணக்கில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம். |
| **<u>2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**<br><br>கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>1) ரூபா, 5,096,661 பெறுமதியான கட்டடம், தளபாடங்கள், வாகனங்கள் என்பன தேய்மானம் அடைந்துள்ளன, எனினும் பாவனையில் உள்ள தற்போதையவை பெறுமதி கணிக்கப்படவுமில்லை அவை கணக்கிற்குக் கொண்டுவரப்படவுமில்லை.<br><br>2) 02 டிரக்டர்கள், 03 டிரய்லர்கள், மற்றும் 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் என்பன ரூபா.5,719,771 செலவில் 1990 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு அவை புத்தளத்திலுள்ள சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்பான அறிக்கைகள் கணக்கில் காட்டப்படவில்லை. | 1) சொத்துக்கள் கணக்கெடுப்பு முடிவடையும் நேரத்தில் பெறுமதி குறைவடைகின்றன. இதனை கணக்கிற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br><br>2) ர்ழுடுஊஐஆ புத்தளம் வளாகத்தில் காணப்படும் பொருட்கள் அங்கிருந்து எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| **<u>2.2.4 விபரிக்கப்படாத மாற்றங்கள்</u>**<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>1) யாழ்ப்பாணம் கிளையின் நிதி அறிக்கை மற்றும் முன்கொண்டு வரப்பட்ட மிகுதியின் வித்தியாசம் ரூபா.5,424,828 ஆகக் காணப்படுகின்றது.<br>2) நிதி அறிக்கைக்கு பிரதான காரியாலயத்தின் ஏற்ப வியாபாரம் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கள்களின் மிகுதியாக ரூபா.114,103,084 காணப்படுகின்றது, அதே நேரம் ஆண்டு ஒப்பீட்டுக்கு ஏற்ப அது ரூபா 113,031,656 ஆகக் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் வித்தியாசம் ரூபா 113,031,656 ஆக காணப்படுகின்றது. | 1) யாழ்ப்பாணக் கிளையில் சேர்ந்துள்ள இலாபம்.∵.(நஷ்டம்) தொடர்பான மிகுதி தொடர்பான அறிக்கையினை வருடாந்த அறிக்கை மேற்கொள்ளும் போது சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.<br><br>2) எதிர்காலத்தில் பிழைகளைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வோம். |
| |  |

| | |
|---|---|
| **<u>2.2.5 கொடுப்பனவு மற்றும் வருவாய் மிகுதிகள்</u>**<br><br>1) வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்க மிகுதிகளின் இந்த ஆண்டுக்கான பெறுமதி ரூபா 839,200,063 ஆகும், அவற்றில் ரூபா 13,435,491 இரண்டு வருடங்களுக்கு முற்பட்டதும்,ரூபா 35,307,781 மூன்று வருடங்களுக்கு முற்பட்டதாகவும் காணப்படுகின்றது.<br><br>2) இந்த வருடத்தின் இறுதித் திகதியில் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தல்களின் பெறுமதி ரூபா 616,960,673 ஆகும், அவற்றில் ரூபா 5,286,079 இரண்டு வருடங்களுக்கு முற்பட்டதாகவும்,ரூபா 22,526,199 மூன்று வருடங்களுக்கு முற்பட்டதாகவும் காணப்படுகின்றது. | 1) ரூபா 778,581,041 இற்கு வருட ஒப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அத்தோடு நீண்டகாலமாக காணப்படும் தொகைகளை பெற்றுக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.<br><br>2) ரூபா 502,857,589 இற்கு வருட ஒப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அத்தோடு நீண்டகாலமாக காணப்படும் தொகைகளை பெற்றுக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். |
| **<u>2.2.6 கணக்காய்வின் போதான ஆதாரங்களின் குறைபாடுகள்</u>**<br><br>கணக்காய்வின் போது காண்பிக்கப்பட்ட பின்வரும் கணக்குகள் மற்றும் தரவுகள் திருப்திகரமானவையாக இல்லை. ஆதாரங்கள் காண்பிக்கப்படாததன் காரணமாக நிராகரிக்கப்பட்ட கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>1. சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் - 547,395,912<br>நிரந்தரமான சொத்துக்கள் பற்றிய குறிப்பு, கணக்கு அறிக்கைகள் திணைக்களம்<br><br>2. இருப்பு 22,843,266<br>இருப்புக்களை உறுதிப்படுத்தும் அறிக்கைகள் | கணக்கு அறிக்கைகள் ஆய்வு -2012 இனை கணக்காளர் நாயகத்திற்கு வழங்க நாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.<br><br>இருப்பு தொடர்பான தகவல்களை கணக்காளர் நாயகத்திற்கு வழங்க நாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். |
| **<u>2.2.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத்தின் முடிவுகளுடன் இணங்கியொழுகாமை</u>**<br><br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்கியொழுகாமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>1. நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் 2009 இன் இல.9<br><br>நாட்டைக் கட்டியெழுப்பும் வரியின் ரூபா 6,850,515 ஆனது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் அது செலுத்தப்படவில்லை. | 1. சீரற்ற நிதி நிலைகள் காரணமாக நாட்டைக் கட்டியெழுப்பும் வரியினை உரிய நேரத்திற்கு செலுத்த முடியாதுள்ளது. நாங்கள் எதிர்காலத்தில் இதனை செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வோம். |

| | |
|---|---|
| (ஆ) 2002 இல. 14 பெறுமானம் சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் பந்தி 2.1<br><br>(1) ஆய்வுக்குட்படுத்திய வருடத்திற்கான பெறுமானம் சேர்க்கப்பட்ட வரித்தொகையான ரூபா. 4,752,790 உள்ளக வருமானவரி ஆணையாளரினால் பெறப்படவில்லை.<br><br>(2) வருமான வரித்தினைக்களத்திற்கு செலுத்த | (ஆ) வருமானவரி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவுரைகளுக்கமைவாக நாங்கள் ஏற்கனவே பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை செலுத்தியுள்ளதோடு மீதமுள்ள தொகை எதிர்காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.<br><br> |

| | |
|---|---|
| வேண்டிய பெறுமானம் சேர்க்கப்பட்ட வரித்தொகையான ரூபா. 6,431,738 யை செலுத்த நடை வடிக்கை எடுக்கவில்லை. | |
| (இ) 1990ஆம் ஆண்டு இலக்கம் 6 மேல்மாகான நிதிச் சட்ட பந்தி இலக்கம் 3<br><br>கடந்த வருடத்தில் மேற்கொண்ட வியாபார நடவடிக்கைகளுக்கான வரித்தொகையான ரூபா. 7,101,932 மேல் மாகான வருமான வரித்தினைக்களத்திற்கு செலுத்தப்படவில்லை | (இ) எமது நிதி நிலைமை வலுவடைந்த பின்னர் அவ் வரித்தொகையை செலுத்தவுள்ளோம். |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு 756<br>ஆய்வுக்குழுவும் ஒரு ஒவ்வொரு நிதியாண்டின் முடிவின் போது நிதி அறிக்கையை ஆய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்க வேண்டும், ஆனால் அது சமரப்பிக்கப்படவில்லை. | (ஈ) 2012ஆம் ஆண்டிற்கான ஆய்வுக் குழு அறிக்கையினை ஆய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றோம். |
| (உ) திறைசேரி சுற்றறிக்கை இலக்கம். 1ஏ1-2002-2 – 2002 நவம்பர் 28ம் திகதி<br><br>சொத்து பதிவு தொடர்பான கணினி, கணினி உதிரிப்பாகங்கள், மற்றும் மென்பொருட்கள் ஆகியன சுற்றறிக்கையின் பிரகாரம் பராமரிக்கப்படவில்லை. | (உ) கணினி, கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனையவை தொடர்பான வேறுபாட்டு அறிக்கையை ஆய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றோம். |

## 3.0 நிதி விமர்சனம்

| | |
|---|---|
| 3.1. நிதிப் பெறுபேறு<br><br>சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கையின் பிரகாரம், கடந்த வருடத்தின் உபரித் தொகையான ரூபா 2,600,231க்கு எதிராக ஆய்வுகளின் பின்னர் ரூபா 70,382,929 பற்றாக்குறை அடையாளங் காணப்பட்டது.கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நடைமுறை ஆண்டில் ரூபா. 72,983,160 அல்லது 2,807 சத விகிதத்தால் பின்னடைவு அல்லது சேதம் ஏற்பட்டுள்ளது. | 3.1. 2012ஆம் ஆண்டில் ரூபா 9 மில்லியன் பெறுமதியான சீமெந்து கட்டியானதால் ஏற்பட்ட இலப்பானது மேற்கூறிய தொகைக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியது. |

## 3.2. பகுப்பாய்வு நிதி விமர்சனம்

கடந்த வருடத்துடன் ஒப்பீட்டுகையில் ஆய்வுக்குட்படுத்திய ரூபா. 72,983,160ல் கீழ் வரும் காரணங்களால் நேரடியான சரிவு ஏற்பட்டது.

| | |
|---|---|
| (அ) வருடத்தில் சர்வதேச நிறுவமொன்றுக்கு ரூபா 3,458,588 முதலீட்டு செலவில் நஷ்ட ஈடாக ரூபா 38,704,668 செலுத்தப்பட்டுள்ளது.<br><br>(ஆ) கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது குறித்த ஆண்டில் விற்பனை வருமானம் ரூபா 294,138,005 அல்லது 45 விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது.<br><br>(இ) குறித்த ஆண்டில் மொத்த விற்பனை செலவானது ரூபா 361,933,397 மற்றும் ரூபா 383,935,878 ரூபா 22,002,481 மொத்த இலாபத்தில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. | (அ) திறைசேரியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இடால் இன்டர் நஷனல் நிறுவனத்திற்கு அமெரிக்க டொலர் 300,000 செலுத்தப்பட்டது. இது 2012ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.<br><br>(ஆ)-(இ) சீமெந்து இறக்குமதி மற்றும் விற்பனையை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொங்கிறீட் உற்பத்திகளை அதிகரித்து அவற்றை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்து எதிர்காலத்தில் காங்கேசன் சீமெந்து ஆலையின் வருமானத்தை அதிகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4.0. செயற்பாட்டு விமர்சனம்

### 4.1. செயற்பாடு

| | |
|---|---|
| கீழ் காணும் விடயங்கள் கவனத்திற்குட்படுத்தப்பட்டது. | (அ) மற்றும் (ஆ) அக்குறிக்கொள்களை அடைவதற்காக நாங்கள் தேவையான ஆயத்தங்களை முன்னெடுத்துள்ளோம். |
| (அ) காங்கேசன் சீமெந்து கொங்கிறீட் உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவின் செலவீனம் மொத்த வருமானத்தை மிகைத்துள்ளதுடன் தொடர்ச்சியான நஷ்டத்தினையும் அடைந்துள்ளது. | |
| (ஆ) வருடாந்த செயற்பாட்டு திட்டத்தின்படி, மெ.டொ. 121,000 சீமெந்து விற்பனையின் மூலம் ரூபா. 1,597,200,000 இலாபத்தினை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், மொத்த விற்பனை தொகையான ரூபா. 361,933,397 ஆனது எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விகிதத்தில் 23 சத விகிதமாகும். எதிர்பார்க்கப்பட்ட பலனை கூட்டுத்தாபனத்தால் எந்த மாத்திலும் அடைய முடியவில்லை. ஆய்வுக்குட்படுத்திய வருடத்தில் அதன் முன்னேற்றம் மிகவும் மந்த கதியில் அமைந்திருந்தது. | |
| (இ) மாதாந்தம் 400 சீமெந்து கொள்கலன்கள் இறக்குமதியானது கொள்ளுப்பிட்டிய நிலத்தில் நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிட பணியின் காரணமாக காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் கொங்கிறீட் துாண் உற்பத்தி வருடத்திற்கு 3000ம் ஆக உயர்வடைந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டினை விரிவுபடுத்துவதற்காக 2012ஆம் ஆணடில் காங்கேசன்துறையில் கடதாசி பொதி ஆலை ஒன்று நிறுவுவதற்கும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய எவ்வித இலட்சியமும் குறித்த ஆண்டில் எட்டப்படவில்லை. | (இ) கொள்ளுப்பிட்டி நிலம் மற்றும் காங்கேசன்றை கடதாசி பொது ஆலை நிறுவுவதற்கான அனுமதி கோரும் விண்ணபத்தினை அமைச்சரவை அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர் காலத்தில் கொங்கிறீட் துாண்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். |

### 4.2. வினைத்திறனற்ற முகாமைத்துவம்

| | |
|---|---|
| கீழ்காணும் விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. | |
| (அ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் அதற்கு சொந்தமான அருவக்குல சுன்னாகல் உற்பத்தியாகும் 5352 ஏக்கர் நிலத்தினை தனியார் சீமெந்து உற்பத்தி நிறுவனமொன்றிற்கு 1995ஆம் ஆண்டு 50 வருட காலத்திற்கு தோண்டுவதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளது. அதன் உடன்படிக்கையின் பிரகாரம், வருடத்திற்கு குத்ததை தொகையாக ரூபா. 22,478,228 கிடைக்க வேண்டும். உடன்படிக்கையின் பிரகாரம், 50 வருட கால எல்லைக்குள் குத்தகையில் மாற்றங்களை ஏற்படுத்த கூட்டுத் தாபனத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை. 2011 ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி நடை பெற்று பொதுக்கூட்டத்தில் கூட இதுபற்றி விவாதிக்கப்பட்டதுடன் குத்ததை உடன் படிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் கூட்டுத் தாபனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டது, ஆனாலும் 2013 ஆகஸ்ட் 31 வரை அதுநிறை வேற்றப்படவில்லை. | (அ) அவ் வுடன்படிக்கையை மாற்றுவதற்கான சாத்தியம் இல்லை என அற்றோனி ஜெனரல் திணைக்களல்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் ஹொல்சிம் லங்கா நிறுவனத்துடன் உடன்படிக்கையை மாற்றுவது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளோம். |

| | |
|---|---|
| (ஆ) புத்தளம், பாலாவி மற்றும் கல்லடி பிரதேசங்களில் அமைந்துள்ள சுமார் 150 ஏக்கர் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான நிலங்கள் இதுவரை பிரயோசனப்படுத்தப்படாமல் உள்ளது. அவற்றில் 9 ஏக்கர் நிலத்தில் சட்ட விரோதமான முறையில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற விதத்தில் பயன்படுத்தாமல் இருந்து அவ்வாறான நிலங்களை மீளப்பெற முடியாது போயுள்ளது. | (ஆ) எங்கள் நிதி நிலைவரம் இன்னும் சீரான பின்னர் அந்நிலங்களில் ஆலைகளை நிறுவுவதற்கான அனுமதியை நாங்கள் பெற்றுள்ளோம். |
| (இ) 2003ஆம் ஆண்டு விற்பனை முகவரினால் 5100 பக்கெட் கொள்வனவிற்கான கொடுப்பனவைச் செலுத்த ரூபா 1,656,000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டும் அக்காசோலை செல்லுபடியாக்கபட்டுள்ளது. அப்பெறுமதியை வட்டியுடன் மீளப் பெறுவதற்காக 2008 பெப்ரவரி 11இல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நீதி மன்ற உத்தரவின்படி அம்முகவரின் சொத்து மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன்,கடந்த பத்து வருடங்களாக அவ்வுடமைகளை ஏலவிற்பனை செய்வதன் மூலமாகவாவது அப்பணத்தை மீளப்பெற கூட்டுத்தாபனம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. | (இ) நாங்கள் எங்கள் கடனாளிகளின் பட்டியலை நீதிமன்றத்திடம் சமர்ப்பித்துள்ளோம். ஆனால், அவர்களின் சொத்துக்களை ஏலவிற்பனை செய்யும் அளவிற்கு எங்கள் நிதி நிலைமை தற்போது சீராக இல்லை. |
| (ஈ) கடனுக்கு நிகரான ஏற்பாடுகளை அதாவது கடன் பெறுதல், முகவரை ஏற்பாடு செய்தல், வினைத்திறனற்ற முகாமைத்துவம் காரணமாக குறித்த ஆண்டில் மொத்த கடனாளிகளின் கடனை செலுத்த முடியாது போயுள்ளதுடன், 9 வருடங்களுக்கு முன்னர் வங்கிகளுக்கு பிழையான தகவல்களை பெற்றுக் கொடுத்து பெற்ற இதுவரை செலுத்தப்படாத கடனான ரூபா 44,467,236 ல் ரூபா 3,832,137 இதுவரை செலுத்தப்பட வில்லை என்பதுடன் அவ்வாறான செயலில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக கூட்டுத்தாபனம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | (ஈ) நிலுவையில் உள்ள அனைத்து கடன்களையும் மீளப் பெறுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 4.3. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| | |
|---|---|
| குறித்த வருடத்தில் கூட்டுத் தாபனமானது இரண்டு தனியார் நிறுவனத்தில் செய்து முதலீடான ரூபா 1,088,418,910க்கு எவ்வித பலனும் அடைய வில்லை. | 1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் அமைந்துள்ள லங்கா சீமெந்து ஆலை அப்போது நிலவிய சூழ்நிலை காரணமாக மூடப்பட்டது. அதனால், எங்களது முதலீடுகளுக்கான பலன்களை அடைய முடியவில்லை. |

### 4.4. சர்வதேச நிறுவனத்திற்கு செலுத்திய நஷ்டஈடு – அமெரிக்க டொலர் 300,000

| | |
|---|---|
| கூட்டுத்தாபனமானது சீமெந்து உற்பத்திக்குப் பயன்படும் மூலப் பொருளான உவரிக்கற்களை இறக்குமதி செய்யும் உடன்படிக்கை ஒன்றில் 1990 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு சர்வதேச நிறுவனத்துடன் இரண்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளன. உடன்படிக்கையின் பிரகாரம்,இந்நிறுவனம் அமெரிக்க டொலர் 475,000 கான கடன் பத்திரத்தினை தயாரித்ததுடன் கூட்டுத்தாபனமானது உள்நாட்டு வங்கிகளுக்கு | திறைசேரியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அ.டொ. 300,000 இலங்கை வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று இடால் இன்டர்நெஷனல் ருளுயு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| கடன் பெறுவதற்கான கடிதங்களை வழங்கியது.<br><br>நிறுவனம் உவரிக்கற்களை தொடர்ச்சியாக வழங்கத் தவறியதுடன், கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கடன் பத்திரத்தினை இரண்டு முறை ஒத்தி வைக்கப்பட்டது. எவ்வாராயினும், நிறுவனத்திற்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதுடன் உவரிக்கற்களின் இறக்குமதி தாமதமானதால் சீமெந்து உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் இருதரப்பிலும் இறுதி முடிவை எட்ட முடியாது போயுள்ளது.<br><br>அதே வேளை, அதன் அமைச்சு மற்றும் அற்றோனி ஜனரல் திணைக்களம் ஆகியவை இணைந்து 2002 ஆம் ஆண்டு இரு தரப்பிற்குமிடையில் செயற்பட்டு உலக வங்கியின் சர்வதேச முகவரின் இடை செயற்பாட்டால் அமெரிக்க டொலர் 1.3 மில்லியன் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கும், புத்தளம் சீமெந்து நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதன்படி, நிறுவனத்திற்கு அமெரிக்க டொலர் 1.0 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் செலுத்த வேண்டிய மீதித் தொகையை நிதி நெருக்கடி காரணமாக கூட்டுத்தாபனம் தாமதப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், சர்வதேசத்தில் இலங்கையின் நன்மதிப்பை பாதுகாப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிடமிருந்து நிதி பெறுவதற்கான அனுமதியை 2012 நவம்பர் 1ம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ரூபா 38,704,668 க்கு சமமான அ.டொ. 300,000 நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை குறித்த ஆண்டில் வங்கி கடன்கள் வாயிலாக செலுத்தப்பட்டது. | |

**4.5. இனங்காணப்பட்ட நஷ்டம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அவதானிக்கப்பட்டது

| | |
|---|---|
| (அ) பீசீசீ கலஞ்சியத்தில் 6,036 சீமெந்து பைக்கற்றுக்களும், பிலியந்தல கலஞ்சியத்தில் 8,295 சீமெந்து பேக்குகளும் சுற்றி வலைப்பின் கட்டபத்தியாதாக இனம் காணப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன. கட்டிபத்திய சீமெந்தின் மூலம் கூட்டுத்தானத்திற்கு ரூபா 9,100,000 நஷ்டம் ஏற்பட்டுள்ளது. | (அ) அவ்வேளையில் முறையான தொகைக் கட்டுப்பாட்டு முறைமை அமுலில் இருக்கவில்லை. |
| (ஆ) வங்கி அதிகப்பபற்றான ரூபா 3,395,384 தொகையை மற்றுமொறு வங்கி அதிகப்பற்றின் வாயிலாக குறைபாடுள்ள நிதி முகாமைத்துவத்தின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. | (ஆ) நிதி நிலைமை காரணமாக வங்கி மேலதிக பற்று பெறாமல் சீமெந்து வியாபாரத்தில் ஈடுபட முடியாது. அதனால், இவ்வருடத்திற்கான வட்டியை நாங்கள் செலுத்த வேண்டியுள்ளது. |
| (இ) குறித்த ஆண்டில் 28,249 மெட்ரிக் டொன் அல்லது 576,156 பேக் சீமெந்து பேக்குகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 221 பேக்குகள் காணாமல் போயுள்ளதுடன் அதன் பெறுமதியானது ரூபா 163,578 ஆகும். | |

### 4.6. குறைபாவனை சொத்துக்கள்

| | |
|---|---|
| கூட்டுத்தாபனமானது 2011ஆம் ஆண்டு ரூபா.550,000 நகர்த்தல் இயந்திரமொன்றை மேலதிகமாக ரூபா 27,429 உதிரிப்பாக செலவீனத்துடன் கொள்வனவு செய்துள்ளது. ஆனால் அவ் இயந்திரம் அது கொள்வனவு செய்த நாள் முதல் எவ்வித பாவனையும் இல்லமால் வைக்கப்பட்டுள்ளது. | ஏலவிற்பனை மூலமாக அவ் இயந்திரத்தை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

### 4.7. ஏனைய அரச நிறுவனங்களுக்கு வளங்களை வழங்கள்

| | |
|---|---|
| பொதுக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் சபையின் வளங்கள் அதன் அமைச்சின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்படவில்லை, கூட்டுத்தானத்தினால் கொள்வனவு செய்த ரூபா. 4,800,000 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்றை அமைச்சின் பாவனைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | மேற்கூறிய வாகனத்தை எங்களது விற்பனை நடவடிக்கைக்காக அமைச்சிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுத்துள்ளோம். |

## 5. பொறுப்பு மற்றும் நேர்த்தியான முகாமைத்துவம்

### 5.1. நிதி அறிக்கை சமர்ப்பித்தல்

குறித்த ஆண்டிற்கான நிதி அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியவற்றை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டியதுடன், 2012ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை 05 மாதங்கள் கடந்த பின்பு 2013 ஆகஸ்ட் 15ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

### 5.2. கூட்டுத்தாபன திட்டம்

| | |
|---|---|
| 2011ல் இருந்து 2015ஆம் வரை 05 வருடங்களுக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதுடன், அதன் நோக்கங்கள் எதுவும் எட்டப்படவில்லை. எவ்வாறாயினும், நாட்டில் இருந்த ஒரேயொரு சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனையாளரான கூட்டுத்தாபனம் தற்போது அதன் நடவடிக்கையை இடை நிறுத்தியுள்ளதுடன், அது தற்போது சுயமாக சீமெந்து இறக்குமதியில் ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் திட்டத்தை குறித்த ஆண்டில் மீளாய்வு செய்ய வெண்டியுள்ளது. | 1990 ஆண்டில் இருந்து யுத்த நிலவரம் காரணமாக காங்கேசன் சீமெந்து ஆலை மூடப்பட்டது. அதன் பின்பு, 2008ஆம் ஆண்டிலிருந்து சீமெந்து இறுகுமதி மற்றும் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.<br><br>கூட்டுத்தாபனத்தின் திட்டத்தினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 5.3. கொள்வனவு திட்டம்

| | |
|---|---|
| 2003 ஜூன் 12 பீஈடீ பந்தி 5 ன் படி கூட்டுத்தாபனமானது 2012ம் ஆண்டிற்கான கொள்வனவு திட்டம் எதையும் வகுக்கவில்லை. | இவ்வருடத்திற்கான கொள்வனவு திட்டத்தினை வகுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 5.4 ஆளணி முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டில் ஆளணி தொடர்பான அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொழிலாளர்கள் வகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை | சரியான தொகை | வெற்றிடங்கள் எண்ணிக்கை | அதிகம் |
|---|---|---|---|---|
| நிர்வாகத்துறை சார் | 07 | 08 | ---- | 01 |
| நிர்வாகத்துறை சாரா | 24 | 16 | 08 | ---- |
| ஏனையவர்கள் | 45 | 38 | 07 | ---- |
| **மொத்தம்** | **76** | **62** | **15** | **01** |

| | |
|---|---|
| ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு அதிகரித்த நிர்வாக அதிகாரியின் இருப்பு பிரச்சனைக்குரியதாக இருக்கும் அதேவேளை வெற்றிடங்களாக காணப்படும் 08 நிர்வாகத்துறை சாரா உறுப்பினர்கள் மற்றும் 07 ஏனைய ஊழியர்களின் தேவை நிறுவனத்தின் சரியான செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைகின்றன. இருப்பினும் முகாமைத்துவம் இதனை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளினை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இந்த வருடத்தில் மேற்கொள்ளவில்லை | எமது நிதி நிலைமைக்கு ஏற்ப இந்த வெற்றிடங்களை நிரப்பும் நிலையில் நாங்கள் இல்லை |

### 5.5 வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு

| | |
|---|---|
| வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்படும் தரவுகள் மற்றும் உண்மையான தரவுகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் நிர்வாகத்துறைக் கட்டுப்பாட்டுக்கு ஒரு சிறந்த ஊடகமாக வரவு செலவுத் திட்டமானது எடுத்துக்கொள்ளப்படவில்லை. | வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடுகளை எதிர்காலத்தில் ஓர் சிறந்த வழிமுறையாகப் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வோம். |